# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ்:6 • 30.12.2018

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்




## இராணுவமயமாக்கலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கின்றதா?

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

## விடுதலைப் புலிகளின் அணுகுமுறைகள் குறித்த தமிழரசுக் கட்சியினரின் கருத்துக்கு முன்னாள் போராளிகளும் பொதுமக்களும் கடும் கண்டனம்





## தமிழ் மக்களின் உரிமைக்கு எதிரானவர்களையே விடுதலைப் புலிகள் எதிர்த்தார்கள்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து

## ஆயுதப் போராட்டம்தான் தமிழ் மக்களின் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தியது

சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு.





## புலிகள் ஜனநாயகத்தை மறுத்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

யாழ். பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றிய தலைவர் கி. கிருஷ்ணமீனன்

# கொள்கைகள் என்று வரும் போது நாங்கள் உறுதியாக இருப்போம்.

### தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம்
## நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

எமது மக்களை கொன்று குவித்த இராணுவமே இன்று கொடைகளையும் கொடுக்க முன்வந்துள்ளது என தெரிவித்த தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தாங்கள் மனிதாபிமானிகள் என்று காண்பிப்பதற்கு எமது மக்களை அவர்கள் பயன்படுத்துகிறார்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



தமிழ் மக்கள் கூட்டணியின் ஏற்பாட்டில் வெள்ள நிவாரணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள மக்கள் நலன் காப்பகம் நடுவகப் பணியகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.தொடர்ந்து உரையாற்றுகையில்

தமிழ் மக்கள் கூட்டணி எம்மால் இயன்ற அளவு மனிதாபிமான முறையில் அண்மைய வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணியைச் செய்துவரு கின்றோம்.

படையினர் தொடர்ந்தும் இங்கிருந்தால் எமது மக்களின் வறுமையைப் பாவித்துத் தமக்குச் சாதகமாக ஒரு சூழலை ஏற்படுத்தக் கூடும் என்பதால்த்தான் நான் இராணுவத்தினரை முற்றாக வெளியேற வேண்டும் என்று கோரி வந்துள்ளேன்.

கொன்று குவித்த இராணுவமே இன்று கொடைகளையும் கொடுக்க முன்வந்துள்ளது. தாம் மனிதாபிமான நிறுவனமாக மாறியுள்ளார்கள் என்று ஜெனிவாவில் காட்ட வேண்டிய ஒரு கடப்பாடு அவர்களுக்கு இருக்கலாம். எமது சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் பலவிதமான அல்லல்களுக்கும் பிறழ்வுகளுக்கும் எம் இனத்தவரையே குறை கூறிப் பயனில்லை. காற்றாடியின் விசையைக் குறைப்பது போல் மத்திய அரசாங்கம் எங்கள் மீது கொண்டிருக்கும் அழுங்குப் பிடியைத் தளர்த்த நாம் ஆவன செய்ய வேண்டும்.

காணாமல் போன உறவுகளை கண்டுபிடிப்பதற்கும் அநீதிக்கு எதிராக நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும் வீதிகளில் நின்று பல வருடங்களாக போராடி வந்துள்ளார்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர். அரசாங்கம் அவர்களின்கோரிக்கைகளை செவிமடுக்காமல் பொறுப்பற்ற வகையில் நடந்து வருகின்றது.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எமது கோரிக்கைகளை செயற்படுத்த அவை முன்வரா. எமது பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொண்ட தமது அனைத்துக் குற்றங் களையும் திட்டமிட்டு மூடி மறைக்கும் செயற்பாடுகளிலேயே அரசாங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன.

அதனால்த் தான் ஜெனீவா மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் ஊடாக பரிகாரங்களைப்பெற்றுக்கொள்ளும் விதமாக முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட காலம் முதல் அவற்றை வலியுறுத்தி வருகின்றேன்.

மனித உரிமைகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் முழுமையாக அமுல் படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்கள் கூட்டணியின் நிலைப்பாடு. இந்தத் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு எத்தகைய செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டும் எவ்வாறு சர்வதேச சமுகத்துக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்பவை குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

இந்த சந்தர்ப்பதில் நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அதாவதுஇ அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத்தீர்த்துவைப்பதிலும் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதிலும் இலங்கையின் உயர்மட்ட நீதித்துறை செயற்பட்ட விதம் நியாயமானது ஆனால்இ இதனை ஒரு

தொடர்ச்சி 3 ம் பக்கம்

# போராளிகளும் பயங்கரவாதிகளும்

எங்கெல்லாம் அநீதிகளும் அடக்குமுறைகளும் பிரயோகிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் போராளிகள் தோற்றம் கொள்கிறார்கள். அல்லது தோற்றுவிக்கப்படுகின்றார்கள். இது ஒரு இயங்கியல் விதி. ஆனால் இந்தத் தோற்றப்பாடு சடுதியாக இடம் பெற்று விடுவதில்லை. அந்தக் களத்தை அநீதியாளர்களே அடக்குமுறையாளர்களே உருவாக்கி பண்படுத்தி விதைத்து விடுகிறார்கள். ஒரு குழந்தையை போல உரிய காலத்தில் அது பிறப்பெடுக்கும்.

இது எங்களது போராட்டத்துக்கும் பொருந்தும். காலத் தேவையாக தோற்றம் கொண்ட எங்களது விடுதலைப் போராட்டமும் உறுதியான வழிகாட்டலில் முழு அர்ப்பணிப்போடு தனது இலக்கை நோக்கிப் பயணித்தது. அண்மைக்கால உலகப் பார்வை மாற்றங்களும் அதீத தொழில்நுட்ப வளர்ச்சிகளும் இருபதுக்கு மேற்பட்ட நாடுகளும் சேர்ந்து எங்களது போராட்டத்துக்கு பாரிய பின்னடைவை கொடுத்தன.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தின் பின்பு தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் தங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை எங்களது தமிழ்த் தேசிய நலன்களுக்காக பாவிக்கத் தவறினர். 1976 இல் வட்டுக் கோட்டையில் தமிழீழப் பிரகடனத்தை மேற்கொண்ட போதும் தேர்தல் காலங்களில் தமது மேடைப் பேச்சுக்களால் இளைஞர்களை உசுப்பேற்றிய போதும் அவர்களிடத்தில் எந்தவொரு செயற்திட்டங்களும் இருக்கவில்லை. வெறுமனே வெற்றுக் கோசங்களே அவர்களிடம் இருப்பதை உய்த்துணர்ந்த இளைஞர்களே போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தினார்கள். ஆயிரக்கணக்கான போராளிகளதும் மக்களதும் உயிர்க் கொடைகளால் முன்னகர்த்தப்பட்ட போராட்டத்தை எந்தவிதமான அர்ப்பணிப்புக்களும் பொறுப்புக்களுமில்லாத அரசியல்வாதிகள் சுயநல நோக்கத்தோடு குழப்பி விடக்கூடாது என்பதில் அவர்கள் மிகவும் அவதானமாகவே இருந்தனர். காலத் தேவைக்கான இந்த அவதானமும் கவனமும் சுயநலவாதிகளுக்கு தடையாகவும் கட்டுப்பாடுகளாகவுமே இருக்கும்.

காலத் தேவையோடு சமூக தேச போராட்டங்கள் நிகழ்கின்ற போது யாருக்காக அந்தப் போராட்டம் நிகழ்கின்றதோ அல்லது நிகழ்த்தப்படுகின்றதோ அவர்களுக்கு அந்தப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் போராளிகளாகத் தெரிவார்கள். யாருக்கெதிராக அந்தப் போராட்டம் நிகழ்கின்றதோ அல்லது யார் யாரெல்லாம் அந்தப் போராட்டத்தால் பாதிக்கப்படுகின்றார்களோ அவர்களுக்கெல்லாம் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகளாகத் தெரிவார்கள். இது மிகவும் எளிமையான பார்வை. இந்தப் பார்வைத் தளத்திலிருந்து அண்மைய கருத்துக்களை நாங்கள் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

புதிய உலக ஒழுங்கு பலத்தின் அடிப்படையிலேயே கட்டி எழுப்பப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்காலின் பின்பு தமிழர் பலம் பெருமளவு குறைக்கப்பட்டதாலும் மீள அது முறையாக கட்டமைக்கப்படாததாலுமே யாரும் எதையும் எங்கும் எப்படியும் கதைக்கலாமென்ற நிலைமை உருவாகி உள்ளது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தை தந்தவர்களிடமே தீர்வுக்காக மண்டியிடும் நிலைமையையே தமிழ்த் தலைவர்களாக தங்களைக் கருதிக் கொள்பவர்களும் எமது உரிமைக்காக குரல் கொடுப்பதாக உள்ளும் வெளியும் சொல்லிக் கொள்ளும் அமைப்புக்கள் பலவும் உருவாக்கி வருகின்றன. தமிழர் பலம் தமிழர் கைகளிலே தான் தங்கி இருக்கின்றது. இதனை நாங்கள் புரிந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபடாதவாறு உள் வெளிச் சக்திகள் அனைத்தும் கூட்டாட்சி புரிகின்றன. முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து 10 ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. இன்னும் எமக்குள் முறையான கலந்துரையாடல்கள் இல்லை. சரியான மீளாய்வுகள் இல்லை. இலக்கை முன்னிறுத்தி எம்மைப் பின்னிறுத்தும் பார்வை இல்லை. எங்கள் பலம் பலவீனம் நலன்கள் அடிப்படையில் இயங்கும் உலகு அது தரும் சந்தர்ப்பங்கள் ஆபத்துக்கள் பற்றிய தெளிவான பார்வையுடனான செயற்திட்டங்கள் இல்லை. இன்னும் எத்தனை காலம் எங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கப் போகின்றோம்?

தமிழர் தரப்பு பொது வீடும் வளவும் முற்றமும் இன்னமும் சுத்தம் செய்யப்படவில்லை. அதனால் தான் குப்பை கூழங்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன. வெளி வேலைகளை பார்ப்பதற்கு முன்பு இந்தக் குப்பை கூழங்களை பெருக்கி குப்பைகளுக்குரிய இடத்தில் அவைகளை வைத்தாக வேண்டும். குப்பைகளை யாரும் தலையில் வைத்துக் கொண்டாடுவதில்லை. தேர்தல் காலங்களில் போராளிகளை போராளிகளாகவும் மற்றைய காலங்களில் அவர்களை பயங்கரவாதிகளாகவும் சித்தரிக்கின்ற இந்தக் குப்பைகள் இப்படி எல்லாம் கதைக்கக் கூடிய சூழலையும் தமிழர் தரப்பு மாற்றியாக வேண்டும். எந்தக் காலத்திலும் போராளிகளை போராளிகளாக மதிக்கும் தமிழர் தலைமை உருவாக்கப்பட வேண்டும். அதற்கு அந்தத் தலைமைகளுக்கிடையில் தம்மைப் பின்னிறுத்தி இலக்கை முன்னிறுத்தும் பார்வையும் தெளிவும் எமது மக்களுக்கான ஒருமைப்பாடும் வேண்டும். தமிழர் பலத்தை மீளக் கட்டி எழுப்புவதில் இலக்கு என்றும் உங்களோடு கைகோர்த்துப் பயணிக்கும். பிறக்க இருக்கின்ற புதிய ஆண்டில் புதிய சிந்தனைகளோடும் தெளிவோடும் இலக்கு நோக்கிய பயணத்தை வீச்சாக்குவோம். மாவீரர்கள் அந்த வல்லமையை எங்களுக்கு வழங்கட்டும்.

# ‘கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது கொள்கைக்காகவல்ல! அது ஒரு டீல்’

கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது கொள்கைக்காகவல்ல! அது ஒரு டீல்” என்று சுமந்திரன் சயந்தன் உள்ளிட்ட தமிழரசுக் கட்சியினரின் கருத்துக்கு எதிராக தமது கண்டனத்தை கூட்டமைப்பை ஒருங்கிணைத்த போது அதில் அங்கம் வகித்த கட்சிகளின் தலைவர்களும் பொதுமக்களும் தெரிவித்துள்ளனர்.

“தமிழ் தேசிய கூட்டமைப்பு கொள்கையின் அடிப்படையில் உருவாகவில்லை விடுதலைப் புலிகளுடன் டீல் செய்து உருவாக்கப்பட்டது” என கூறி தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றி தன்னுடைய கருத்தை பகிரங்கமாகக் கூறி புதிய சர்ச்சை ஒன்றுக்குள் சிக்கியுள்ளார் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் கே.சயந்தன்.

அவரது இந்தக் கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியிலும் குறிப்பாக முன்னாள் போராளிகள் மாவீரர்கள் குடும்பங்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு கம்பன்கழகம் அண்மையில் அரசியல்கட்சிகளை உள்ளடக்கி எதிர்காலத்தில் தமிழ் மக்களிற்கு தலைமை தாங்க தகுதியானவர்கள் யார் என்ற கருத்தாடற்களம் ஒன்றை நடத்தியது. இதன்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு எப்படி உருவாக்கப்பட்டது? கொள்கையின் அடிப்படையில் உருவானதா?ஏதும் நோக்கத்துடன் உருவானதா?அல்லது வெறும் தேர்தல் கூட்டா? என எழுப்பப்பட்ட கேள்விக்கே இப்படி பதிலளித்தார் கே.சயந்தன்.

“கூட்டமைப்பு உருவானது விடுதலைப் புலிகளுடன் செய்யப்பட்ட டீல். ஜனநாயக தேர்தலில் போட்டியிடுபவர்கள் வரிசையாக இலக்கு வைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். தேர்தலில் போட்டியிட்டு கொல்லப்படாமல் இருக்க விடுதலைப் புலிகளுடன் ஒரு டீலுக்கு போக வேண்டியிருந்தார்கள். விடுதலைப்புலிகள் தாமே ஏகபிரதிநிதிகள் என்று கூறினாலும் அதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை.



கூட்டமைப்பின் ஊடாக அதை நிறுவிக்கொள்ள வேண்டிய தேவை அவர்களிற்கும் இருந்தது. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விடுதலைப்புலிகளே ஏக பிரதிநிதிகள் என குறிப்பிடப்பட்டிருந்தது. தேர்தலில் கூட்டமைப்பை மக்கள் அங்கீகரித்த பின்னர் விடுதலைப் புலிகளே ஏகபிரதிநிதிகள் என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரித்தது. இதைத்தவிர கூட்டமைப்பு உருவாக்கத்தின் பின்னால் எதுவும் கிடையாது” என்பதுதான் சயந்தன் கூறிய கருத்து.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவானது ஒரு ‘டீல்’ என அண்மையில் தமிழரசுக்கட்சியின் தென்மராட்சிகிளை தலைவர் கே.சயந்தன் குறிப்பிட்டிருந்தார். இதற்கு மக்கள் மத்தியிலும் சமூக வலைத்தளங்களிலும் கடும் எதிர்ப்பு கிளம்பியிருந்தது. இந்த நிலையில் சனிக்கிழமை யாழில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மேற்படி கருத்து சரியானது என்ற சாரப்பட தெரிவித்தார்.

“தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவான போது அதில் நான் இருக்கவில்லை. அதனால் என்ன ‘டீல்’ நடந்ததென்பது எனக்கு தெரியாது. ஆனால் பொதுவான உண்மை உள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாகும்வரை ஜனநாயக அரசியலில் ஈடுபட்ட தமிழ் தலைவர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனநாயக வழியில் அரசியல் செய்ய விடுதலைப் புலிகள் இணங்கினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் அவர்கள் சமாதான பேச்சில் இறங்கிய போது பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியல் சக்தி ஒன்று இருக்க வேண்டிய அவசியத்தை நோர்வே போன்ற பல நாடுகளால் ஆலோசனையாக கொடுக்கப்பட்டது எங்கள் எல்லோருக்கும் தெரியும். தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கத்திற்கு இரண்டு தரப்பின் தேவைகளும் சந்தித்ததே காரணம்“ என்றார் சுமந்திரன்.

இந்த இருவரது கருத்துக்களும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் கூட்டமைப்பை உருவாக்கியபோது அதில் அங்கத்துவம் பெற்ற கட்சிகளின் தலைவர்களும் பொதுமக்களும் தெரிவித்த கருத்துக்களை “இலக்கு” வாசகர்களுக்காகத் தருகின்றோம்.

தொடர்ச்சி 5 ம் பக்கம்

# தமிழ் மக்களின் உரிமைக்கு எதிரானவர்களையே விடுதலைப் புலிகள் எதிர்த்தார்கள்

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து**



தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கு முன்னர் தமிழ் கட்சிகள் ஜனநாயக அரசியலில் ஈடுபடுவதற்கு விடுதலைப் புலிகளால் தடை விதிக்கப்பட்டிருந்து என்ற கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்ததை தமிழ் மக்களின் உரிமைக்காக நேர்மையுடனும் துணிச்சலுடனும் போராடிவரும் எந்தவொரு தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட முன்னர் தமிழ் கட்சிகள் ஜனநாயக அரசியலில் ஈடுபடுவதற்கு விடுதலைப் புலிககள் தடை விதித்திருந்தார்கள் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்ததை ஏற்கமுடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மெலும் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:

சனநாயக களத்திலே தமிழ் மக்களின் கொள்கைக்காக நேர்மையுடன் குரல்கொடுத்த எந்தவொரு அரசியல் தலைமைகளையும் விடுதலைப் புலிகள் எதிர்க்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராக செயற்பட்டவர்களையே விடுதலைப் புலிகள் எதிர்த்தார்கள். இதுவே வரலாறு.

கூட்டமைப்பில் உள்வாங்கப்பட்ட கட்சிகள் மக்களின் நலன்சார்ந்து தமிழ் தேசியக் கொள்கையில் உறுதியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் விடுதலைப் புலிகள் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். எந்த நோக்கத்திற்காக கூட்டமைப்பு உருவாக்கப் பட்டதோ அந்த நோக்கத்திலிருந்து கூட்டமைப்பினர் வெளியேறியதால் கூட்டமைப்பின் உருவாக்கம் குறித்தோ புலிகளின் சனநாயக அணுகுமுறைகள் குறித்தோ கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரோ அல்லது சுமந்திரன், சயந்தன் உள்ளிட்டவர்கள் கூறும் கருத்துக்களின் உள்நோக்கத்தை தமிழ் மக்கள் உணர்ந்துகொள்வார்கள்.

தொடர்ச்சி 11 ம் பக்கம்

# ஆயுதப் போராட்டம் தான் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தியது

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் தொடர்பாக தமிழரசுக் கட்சியினர் அண்மைக்காலங்களில் செய்துவரும் எதிர்ப்பிரச்சாரம் என்பது நீண்டகாலமாக தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடிய போராளிகளின் தியாகம் மற்றும் பொதுமக்களின் இழப்புக்களை கொச்சைப்படுத்தும் ஒரு நடவடிக்கை என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் அன்றைய காலகட்டத்தில் சகல கட்சிகளின் கூட்டின் அவசியத்தை எல்லோரும் உணர்ந்ததன் விளைவாக ஜனநாயக அரசியலை தமிழ் மக்களின் விடுதலைக்கு சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் சகல கட்சிகளையும் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. சயந்தன் கூறுகின்ற டீல் என்பதன் பொருள் மேற்குறித்த தேவையை மலினப்படுத்துவது போன்றதொரு கருத்துருவாக்கமாகும். தமிழரசுக் கட்சியினர் தாம் ஆயுதப் போராட்டத்திற்கு எதிரானவர்கள் என தொடர்ச்சியாக தம்மை அடையாளப்படுத்தி வருகின்றனர். ஆனால் ஆயுதப் போராட்டம் என்பதுதான் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தியது என்பதும் இன்று அதன் அடிப்படையில்தான் ஐ.நா. வரை எமது பிரச்சினைகள் எடுத்துச் செல்லப்பட்டது என்பதும் அந்த அடித்தளத்தில் நின்றுதான் இன்று சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் பேச்சுவார்த்தைகள் என்பவற்றைச் செயற்படுத்தி வருகின்றார்கள் என்பதும் வெளிப்படையானது. ஆனால் சம்பந்தன் சுமந்திரன் சயந்தன் மற்றும் தமிழரசுக் கட்சியினரின் முன்னணி உறுப்பினர்களின் கருத்துக்கள் அவ்வப்பொழுது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு எதிரானவையாகவும் தமிழ்த் தேசியம் என்பதை தமிழ் மக்களின் சிந்தனையிலிருந்து அகற்றுவதாகவும் அமைந்து வருகின்றன. பாராளுமன்றத்தில் சம்பந்தன் அவர்கள் பேசுகின்றபொழுது விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்டதிலிருந்தும் நாங்கள் தனி நாட்டை தமிழீழத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை பலமுறை சுட்டிக்காட்டியதிலிருந்தும் சகல அமைப்பின் போராளிகளையும் கொச்சைப்படுத்தும் அவர்களது கருத்துக்களும் செயற்பாடுகளும் தமிழ் மக்களின் எழுச்சியையும் உணர்வுகளையும் மழுங்கடிப்பதாகவுமே உள்ளது.



தமிழரசுக் கட்சியினர் விடுதலைப் புலிகளுடன் டீல் ஒன்றை மேற்கொண்டனர் என்ற சயந்தனின் கூற்றும் அது சரியான வாதமே என்னும் சுமந்திரனின் வக்காளத்தும் ஈழ விடுதலைக்கு தமது இன்னுயிரை ஈந்த பல்லாயிரம் போராளிகளை இழிவுபடுத்துவதும் பல இலட்சம் மக்களின் இழப்புக்களைக் கொச்சைப்படுத்துவது மாத்திரமல்லாமல் ஒட்டுமொத்தமான விடுதலைப் போராட்டத்தையே கேள்விக்குள்ளாக்கும் இவர்களது செயற்பாடுகளை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு நபரும் புரிந்துகொள்ள வேண்டும். உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் இந்தப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் தமிழரசுக் கட்சியினர் எவ்வளவு கபடத்தனமாக தமிழ் தேசியத்தை தமிழ் சமுதாயத்திலிருந்து அகற்றுவதற்கு செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறானவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக எதிர்காலத்தில் வந்துவிடக்கூடாது என்பதைப் புரிந்துகொண்டு தமிழ் கூறும் நல்லுலகம் செயற்பட வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகிறது.

### 1 ம் பக்க தொடர்சி

உதாரணமாக எடுத்துக்கொண்டு போர்க்குற்றம் மற்றும் இனப்படு கொலை விடயங்களில் இலங்கை நீதிமன்றங்களின் ஊடாக நியாயமானதீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சர்வதேச சமூகம் சிந்திக்கக்கூடாது.

இரு இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஏற்பட்டதே இனப்படுகொலை. பிழையான சரித்திரங்களை வரலாறுகளை மக்கள் மனதில் உள்ளேற்றியதால் ஏற்பட்டதே இனப்படுகொலை.

ஆனால்இ அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி என்பது நாட்டுக்கு ஏற்பட்ட ஒரு பொதுவான பிரச்சினை. ஜனநாயகம் சம்பந்தமான பிரச்சனை அங்கே இன ரீதியான பக்கச் சார்பான செயற்பாடுகளுக்கு இடம் இருக்கவில்லை. இனப்பிரச்சினை விடயத்தைப் பொறுத்தவரையில் இலங்கையின் எல்லா தேசிய நிறுவனங்களுமே இன ரீதியாகப் பிளவடைந்து நிற்கின்றன. அரசாங்கத்தினாலும் பெரும்பான்மை இன மக்களினாலும் கட்டுப்படுத்தப்படும் இந்த நிறுவனங்களில் எமக்கான நீதியை நாம் எதிர்பார்க்க முடியாது. இதற்கு நீதித்துறை விதிவிலக்கல்ல.

அதனால் தான் உள்ளக விசாரணையை தமிழ் மக்கள் கூட்டணி எதிர்க்கின்றது. ஐ. நா கண்காணிப்புடன் கூடிய வெளிநாட்டு நீதிபதிகளின் பங்குபற்றுதலுடன் கூடிய விசாரணையே சுதந்திரமான உண்மையான நீதியைப் பெற்றுத்தரக் கூடியது.

காணாமல் போனோரின் குடும்பத்தவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தருவதானால் இவ்வாறான வெளிநாட்டு நீதித்துறையினரின் பங்குபற்றுதலுடன் நடைபெறும் விசாரணைகளே அவற்றைப் பெற்றுக் கொடுப்பன என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியாது.

எமது கட்சி கொள்கைகள் சார்ந்த கட்சி. கொள்கைகள் என்று வரும் போது நாங்கள் அவற்றில் உறுதியாக இருப்போம். இவ்வாறான மனிதாபிமான உதவிகள் வழங்கும் இடத்தில் எந்தவித அரசியலையும் முடியுமான வரையில் சேர்க்க மாட்டோம். ஆனால் சில விடயங்களை இங்கு கூற வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

அதாவது நாங்கள் கொள்கைகளில் விடாப்பிடியாக நிற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆளுக்கு ஆள் கொள்கைகள கொள்கைகள் என்று கூறிவிட்டுத் தமது பைகளை நிரப்பிக் கொள்கின்றார்கள்.

உல்லாச வாழ்க்கைகள் வாழ்கின்றார்கள். கொள்கைகளை ஆவணங்களில் பொறித்து விட்டு சுயநல நடவடிக்கைகளில் ஈடுபடத் துணிந்துள்ளனர்.

அந்த நிலை மாற வேண்டும். எமது வருங்காலம் பற்றிய சிந்தனைகள் மேலெழுந்தால் கட்டாயமாக நாம் எமது கொள்கைகளில் பற்றுறுதியாக செயற்பட வேண்டி வரும் என மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் ஆதரவினால்தான் நாம் பாராளுமன்ற ஆசனத்தை அதிகமாக பெற்றோம்.

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்,





தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கம் புரிந்துணர்வு அடிப்படையில் செய்யப்பட்ட விடயமே தவிர டீல், அச்சுறுத்தல் என்பது அனைவரையும் கொச்சைப்படுத்தும் கருத்து என தெரிவித்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், சயந்தனுடைய கருத்து தமிழரசுக்கட்சியில் உள்ள ஒருசில உறுப்பினர்களுடைய எண்ணப்பாட்டையே பிரதிபலித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

கம்பன் கழகத்தால் அண்மையில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பாக உரையாற்றும் போது, தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கம் ஒரு டீல் என்ற வகையில் உரையாற்றியிருந்தார். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்குறித்தவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ் தேசிய நலன் சார்ந்து செயற்பட வேண்டும் என்ற உணர்வில் ஆரம்பத்தில் இருந்தோம். அதன்படி செயற்பட ஆரம்பித்தோம். விடுதலைப்புலிகளுடன் பகை உணர்வை தொடர்வதில்லை என முடிவெடுத்தோம்.

அதன்படி இயக்கங்கள் புரிந்துணர்வுக்கு வரவேண்டும்

தொடர்ச்சி 10 ம் பக்கம்

# இராணுவமயமாக்கலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கின்றதா?

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

சிறீலங்காவை பிரித்தானியர்கள் கைவிட்டுச் சென்ற பின்னரான கடந்த 70 வருடங்களில் சிங்கள பெருமன்பான்மை அரசுகள் பல அரசியல் நெருக்கடிகளை தமது பிரதேசத்தில் சந்தித்துள்ளன. சிறுபான்மை இனங்கள் மீது தனது இன அடக்குமுறைகளை பயன்படுத்திவரும் பெருன்பான்மைச் சிங்கள அரசின் இந்த நெருக்கடிகளை தமக்கு சாதகமான ஒரு பேரம் பேசும் அரசியல் காரணியாக பயன்படுத்துவதில் இருந்து பல தடவைகள் தமிழ் இனம் தவறியுள்ளது அல்லது தமிழ் அரசியல் தலைவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களால் தவறவிடப்பட்டது ஆனால் சில சந்தர்ப்பங்களில் தமிழர் தரப்பு அதனை சரியாக பயன்படுத்தியும் இருந்தது.

அதற்கான சிறந்த உதாரணமாக 1988 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் அன்றைய அரசுக்கு எதிராக ஜே.வி.பி யினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுத போராட்டத்தினால் தென்னிலங்கை அரசு மிகப்பெரும் நெருக்கடியை சந்தித்திருந்தது. பல ஆயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டபோது சிங்கள மக்களை அமைதிப்படுத்தி தனது ஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதற்கு அன்றைய அரச தலைவர் பிரேமதாசா அவர்களுக்கு விடுதலைப்புலிகளின் உதவிகள் தேவைப்பட்டது.

தமக்கு கிடைத்த பேரம்பேசும் அரசியலை விடுதலைப்புலிகள் சரியாக பயன்படுத்திக் கொண்டனர். தென்னாசியப் பிராந்தியத்தில் அன்று வாழ்ந்த அரசியல் சாணக்கியர்களில் ஒருவர் என வர்ணிக்கப்பட்ட ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் அரசியல் சாணக்கியத்தையும் மிஞ்சிய அதி உயர் அரசியல்இராஜதந்திரம் விடுதலைப்புலிகளின் அன்றைய முடிவில் தெரிந்தது.

> **2015 ஆம் ஆண்டு மைத்திரி -ரணில் தலைமையிலான கூட்டாட்சியிடம் தமிழ் மக்களின் கோரிக்கைகள் எதனையும் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை. மாறாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி, நாடாளுமன்றக் குழு பிரதிநி-திகளின் தலைவர் பதவி மற்றும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவர் பதவி ஆகிய 3 பதவிகளையுமே கூட்டமைப்பு கோரியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.**

பிரேமதாசாவுடன் பேச்சுக்கள் ஆரம்பமாகியது, தமது போராட்டத்தை வலுப்படுத்த தேவையான உதவிகள் பேரம்பேசும் பொருளாக முன்வைக்கப்பட்டன, தென்ஆசியப் பிராந்தியத்தின் பிராந்திய வல்லரசான இந்தியாவின் மிகச்சிறந்த கொள்கைவகுப்பாளர்களும் ஜெயவர்த்தனாவும் இணைந்து உருவாக்கிய இலங்கை — இந்திய ஒப்பந்தம் நிர்மூலமானது நிரந்தரமாக தளம் அமைக்கும் நோக்கத்துடன் வந்திறங்கிய இந்தியப் படைகள்



வெளியேறின. அவர்களால் உருவாக்கப்பட்ட ஆயுதக்குழுக்களும் துடைத்தழிக்கப்பட்டன.

அதாவது வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட லிபரேசன்— ஒபரேசன் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு பூசா தடைமுகாமில் தடுத்துவைக்கப்பட்ட மக்கள் உட்பட அரசியல் கைதிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை பயன்படுத்தி விடுவிக்கப்பட்டனர், அதன் பின்னர் தென்னிலங்கை நெருக்கடிகளையும் விடுதலைப்புலிகளின் கெரில்லா போர்முறையையும் பயன்படுத்தி இந்தியப் படைகள் வெளியேற்றப்பட்டனர். தமக்கு கிடைத்த எந்த சந்தர்ப்பத்தையும் விடுதலைப்புலிகள் தவறவிடவில்லை.

விடுதலைப்புலிகளின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இதனை போல பல அரசியல் நகர்வுகளை நான் இங்கு குறிப்பிட முடியும்.

ஆனால் இன்று தமிழர்களின் பிரதிநிதிகள் என கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது என்பதை உற்று நோக்கினால் அவர்களின் அரசியல் வரட்டுத்தன்மை தெளிவாகப் புரியும்.

கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் நாள் சிங்கள தேசம் மிகப்பெரும் அரசியல் நெருக்கடிகளை சந்தித்தது. அந்த அரசியல் நெருக்கடிகளை எவ்வாறு எமக்கு சாதகமாக்கி எமது அரசியல் கோரிக்கைகள் அல்லது தமிழ் மக்கள் போரினால் எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கான தீர்வை பெறமுடியும் என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிந்திக்கத் தவறியது மிகப்பெரும் வரலாற்று தவறாகும்.

சிங்கள அரசின் நெருக்கடிகளை பயன்படுத்தி தமிழ் மக்கள் பெறவேண்டிய பல கோரிக்கைகள் எம்வசம் உள்ளன.

- காணாமல் போனவர்கள் தொடர்பான சுயாதீன விசாரணையும் அதற்கான தீர்வும்
- அரசியல் கைதிகளின் உடனடியான விடுதலை
- சிறீலங்கா அரசினால்ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துதல்
- சிங்கள இராணுவத்தினர் ஆக்கிரமிப்பில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவித்தல்
- அரசியல் தீர்வுப் பொறிமுறைக்கான கால அட்டவணையை நிர்ணயித்தல்;

இவ்வாறு பல கோரிக்கைகள் எம்வசம் உள்ளபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பது தமிழ் மக்களின் மனங்களில் கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

2015 ஆம் ஆண்டு மைத்திரிரணில் தலைமையிலான கூட்டாட்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டபோது அதனை நல்லாட்சி என தெரிவித்து நிபந்தனையற்ற ஆதரவுகளை வழங்கி அனைத்துலகத்தில் சிறீலங்கா அரசுக்கு ஒரு நற்பெயரை ஏற்படுத்திய பெருமையும் அவர்களையே சாரும்.

சிறீலங்கா அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்ற தமிழ் மக்களின் போராட்டத்தை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் நிலையின் விளிம்பில் இருந்தபோது அதனை உள்ளகப்பொறிமுறையாக மாற்றியதில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பின்புலம் உள்ளதாக 2015 ஆம் ஆண்டு கருதப்பட்டது.

அதாவது பேரம்பேசும் நிபந்தனைகளாக தமிழ் மக்களின் கோரிக்கைகள் எதனையும் கூட்டமைப்பு முன்வைக்கவில்லை. மாறாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி, நாடாளுமன்றக் குழு பிரதிநிதிகளின் தலைவர் பதவி மற்றும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவர் பதவி ஆகிய 3 பதவிகளையுமே கூட்டமைப்பு கோரியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பின்னரும் சிறீலங்கா அரசு கொண்டுவந்த மூன்று வரவுசெலவுத்திட்டங்களையும்



தொடர்ச்சி 7 ம் பக்கம்

# டீல்”என்ற சுமந்திரன் சயந்தன் கருத்துக்கு எதிராக மக்கள் கொந்தளிப்பு

## பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சு.சிவரத்தினம்

சயந்தன் வரலாறு தெரியாமல் புலம்புகிறார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர் ஊடகவியலாளர் சிவராம் ஆவார். அவர் இது தொடர்பாக டெய்லி மிரர் பத்திரிகையில் 02.11.2004 அன்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதன் பிரகாரம் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலுக்காக தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையில் ஈடுபட்டு அவர்களால் இது அமைக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியஸ்தர் ஒருவர் ரெலோஇ ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகள் இணைவதை முற்றாக எதிர்த்த போதும் விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் கரிகாலன்இ இவர்களுடன் புளொட்டும் கூட்டமைப்பில் சேர வேண்டும் என கூறியிருந்தார் எனவே தமிழர் மறுமலர்ச்சி கழகத்தின் முயற்சியினால் இது அமைக்கப்பட்டது. இந்த முயற்சி யுத்த தந்திரோபாய அடிப்படையில் விடுதலைப்புலிகளுக்கு சாதகமானது என்பதை சிவராம் புலிகளின் தலைமைகளுக்கு எடுத்து விளக்கியிருந்ததாகவும் அறியக்கூடியதாக இருந்தது. அதை விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்டனர் என்பதே உண்மையாகும்.

மேலும் சிவராம் குறிப்பிடுவதை அவ்வாறே தருகிறேன்.” என்னைக் கேட்டால் அவர்களில் சிலர் தமிழ் மக்களுடைய போராட்டங்கள்இ அபிலாசைகள்இஆகியவற்றில் எவ்விதமான அக்கறையும் இல்லாதவர்கள் என்றே கூறுவேன். அக்கறை இருந்தால் கடந்தவாரம் தெல்லிப்பளையில் நடந்த சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் திருவாளர்கள் மாவை சேனாதிராஜாஇ அல்லது எம்.கே.சிவாஜிலிங்கம்இ அல்லது அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரின் நிழலைக் கூட காணமுடியவில்லை” என்கின்றார். உண்மையில் இதுதான் கூட்டமைப்பின் சுயநல அரசியலாகும்.

ஆயினும் விடுதலைப் புலிகளின் நிழலில் அவர்கள் தொடர்ந்தும் இளைப்பாறி உண்டு உறங்குகிறார்கள். மக்கள் அதை விளங்குவதாக இல்லை.

அதாவது மக்கள் நல அரசியல் இல்லாத கட்சியினால் தமிழர்களுக்கான சரியான தலைமைத்துவத்தினை வழங்க முடியாது. துரதிஸ்டவசமாக யுத்தமும் விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியும் தமிழ் சமூகத்தில் பாரிய தலைமைத்துவ வெற்றிடத்தை உருவாக்கியுள்ளது. இந்த வெற்றிடத்தை தேர்தல் அரசியல் பேசிக்கொண்டோ அல்லது புலி அரசியல் பேசிக்கொண்டோ நிரப்ப முடியாது.

உண்மையில் மாற்று அரசியல் என்பது தமிழர்களுடைய இத்தனை வருட போராட்டத்தினை மேற்கூறிய இரு வழிகளுக்கும் அப்பால் எவ்வாறு கொண்டு செல்வது என்பதிலே தங்கியுள்ளதே தவிர ‘அ’ இருந்த இடத்தில் ‘ஆ’ வை வைப்பது மாற்று அரசியல் அல்ல. எனவே மாற்று அரசியலுக்கான தேவை முற்றுமுழுதாக எமக்கான தேவையாக இருக்கின்றது. அதை முன் கொண்டு செல்ல சரியான தலைமைகளை இனம் கண்டு மக்கள் அவர்கள் பின்னால் அணிதிரள வேண்டும் எனத் தெரிவித்தார்.

## உயிருக்கு பயந்து பதவிக்காக வேசம் போட்டவர்களே ஊளையிடுகின்றார்கள்.

### ஜோசப் தர்மன் மன்னார்

உயிருக்கு பயந்தோ அல்லது உயிர் அச்சுறுத்தல் காரணமாகவோ நாங்கள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலை புலிகளை ஏற்று கொள்ளவும் இல்லை அவர்களுடன் இணக்கப்பாட்டுக்கும் செல்லவுமில்லை

மாறாக ஒட்டு மொத்த தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற போராடும் அமைப்புக்கள் நமக்குள் இருக்கும் இடர்பாடுகளை களைந்து ஒரு வழியில் பயணித்து எம் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காகவே விடுதலை புலிகளுடன் பேச்சு வார்தைக்கு சென்றோம் அதே போன்று தான் புரிண்துணர்வு உடன்பாட்டுக்கும் வந்தோம்

மாறாக தமிழ் அரசு கட்சியின் கைக்கூலியாகிய சயந்தன் கூறியது போல் உயிர் அச்சுறுத்தலுக்கு பயந்தோ அல்லது எந்த டீலின் அடிப்படையிலும் நாங்கள் விடுதலை புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கு போகவில்லை போக வேண்டிய அவசியமும் எங்களுக்கு இருக்கவில்லை

அவ்வாறான உயிருக்கு பயந்து பேச்சு வார்தைக்கு வந்த அமைப்புக்கள் யுத்த காலப்பகுதியிலும் தற்போதும் மத்திய சிங்கள அரசுகளுடன் இணக்க அரசியலில் ஈடுபட்ட கட்சிகளே தவிர தொடக்கம் முதல் இறுதி வரை தமிழ் மக்களின் உரிமைகாக போராடிய எங்கள் கட்சி அல்ல என்பதை சயந்தன் புரிந்து கொள்ள வேண்டும்

விடுதலை புலிகளின் போராட்டம் மௌனித்த பிறகு அரசியலுக்கு வந்து ஆட்டம் போட்டு ஆயுத போராட்டத்தின் அடிப்படை கூட அறியாமல் சுய விளம்பரம் தேடும் இவ்வாறானவர்கள் களைந்தெடுக்கப் பட வேண்டும்

விடுதலைபுலிகளுக்கும் கூட்டமைபின் தலைவராக நான் தேர்ந்தேடுக்கப்பட்டதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூறியவர்களும் விடுதலை போரட்டம் முறியடிக்கப்பட்டதும் பாராளுமன்றத்தில் சந்தோசத்தை வெளிப்படுத்தி வாழ்த்து தெரிவித்தவர்களும் வேண்டுமானல் உயிருக்கு பயந்து விடுதலை புலிகளுடன் இணைந்திருக்கலாப்ஆனால் நாங்கள் கொள்கை ரீதியாக உரிமை அடிப்படையில் ஒரே பாதையில் பயணிப்பதற்காகவே விடுதலை புலிகளுடன் இனைந்து கொண்டோம்

புலிகள் இருக்கும் போதும் எமது அரசியல் தமிழ் மக்களின் தீர்வுக்கான அரசியல் புலிகள் இல்லாத போதும் எமது அரசியல் தமிழ் மக்களின் தீர்வுக்கான அரசியல் தானே தவிர இருக்கும் போது ஒருகதையும் இல்லாத போது ஒரு கதையும் கதைக்கும் ஈன அரசியல் விடுதலை போராட்டம் எங்களுடையது இல்லை

எனவே விடுதலை போராட்டத்தையும் விடுதலை புலிகளின் ஜனநாயக செயற்பாடுகளையும் கொச்சை படுத்திய சயந்தன் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்

## கூட்டு ஒப்பந்த்த்தில் கூட்டமைப்பு.

### தமிழினி முல்லைத்தீவு

ஜனநாயக விரோதிகளாக புலிகளை சித்தரிக்கும் கீழ்த்தரமான அரசியலை கூட்டமைப்பின் சம்பந்தர், சுமந்திரனைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினரான சட்டத்தரணி கேசவன் சயந்தன் அவர்கள் அண்மையில் கூறிய கருத்தானது அரசியல் அவலக் கருத்தாகும்.இவர் யாருடைய தூண்டுதலில் இவ்வாறு பேசுகிறார், செயற்படுகின்றார் என்பதை இந்த தமிழ்ச் சமுகம் நன்கறியும்.

புலிகளால் அடையாளம் காட்டப்பட்ட கட்சி என்ற தகுதி மட்டுமே இன்றுவரை கூட்டமைப்பை உயிர் வாழ வைத்திருக்கிறது.

இன்று கூட தமிழ் மக்கள் இது புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சி என எண்ணியே வாக்களிக்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.இந்த புலி அடையாளத்தை அப்புறப்படுத்தும் முயற்சியின் ஒரு அங்கமே சயந்தனின் சதிராட்டம்.முள்ளிவாய்க்கால் ஆயுத மௌனிப்பின் பின் கூட்டமைப்பின் அரசியல் நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக தமிழர்களுக்கு எதிராகவே நடந்தேறியுள்ளது.

ஆயுத மௌனிப்பின் பின் நடைபெற்ற தேர்தலில் ஏற்கனவே புலிகளால் உள்வாங்கப்பட்டவர்கள் திட்டமிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர் அல்லது திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.அத்துடன் புலிகளால் இணைத்துக் கொள்ள மறுக்கப்பட்ட கட்சியை கூட்டமைப்பில் இணைத்துள்ளனர்.இதேவேளை கூட்டமைப்பின் தொடக்கத்தில் உள்வாங்கப்பட்ட கட்சிகள் கூட்டமைப்புக்குள் வெளிப்படையான ஜனநாயகமோ கூட்டு பொறிமுறை செயற்பாடோ இல்லையென முரண்பட்டு கூட்டமைப்பிலிருந்து வெளியேறின.இவ்வாறு கட்சிகளிடையே முறுகல் நிலை தோன்றினாலும் அவை அனைத்தும் பதவி ஆசை காட்டி தணிக்கப்பட்டது.

இக்கருத்து பலவிதமான அரசின் செயற்பாடுகளுக்கு ஒத்தூதும் போக்கை எதிர்காலத்தில்கொண்டுவரும்.சிறையில் இருக்கும் கைதிகள் அரசியல் கைதிகள் என்ற நிலை மாறி அவர்கள் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்படலாம். தடுப்பில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டு சமுகத்தோடு இணைந்தவர்கள் மீண்டும் கைது செய்து காணாமல் ஆக்கப்படலாம். தமிழர் பூர்வீக நிலங்களில் இராணுவ பிரசன்னங்களை அதிகரித்து ஒட்டுமொத்தமாக தமிழரின் தீர்வை இழுத்தடிப்பு செய்து அதன் கனதியை குறைத்து நீரத்துப்போகச் செய்யும்என்றே கருத முடியும்.

நிச்சயமாக சம்பந்தர் தொடக்கி வைத்த புலி எதிர்ப்பு நிலை வாதம் சயந்தன் போன்றவர்களால் தொடரப்படுகிறது. இந்நிலையில் இனி எவ்வாறு கூட்டமைப்பின் பக்கம், புலிச்சார்பு நிலை மக்கள் வாக்களிக்கப் போகின்றார்கள் என்று புரியவில்லை. அவ்வாறானவர்களின் வாக்கே கூட்டமைப்பின் வாக்கு வங்கியாக காணப்பட்ட நிலையில் பாரிய வாக்கு வங்கி சரிவை எதிர்காலத்தில் கூட்டமைப்பு சந்திக்கும். உண்மையாக தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் மக்கள் இனிமேல் கூட்டமைப்புக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதே உண்மையாகும்.

தொடர்ச்சி 11 ம் பக்கம்

# தமிழரசுக்கட்சியின் புதுத்தலைகள் வரலாறு அறிந்து பேசவேண்டும்

கணிதன்

இலங்கையில் காலனி ஆதிக்கம் தமது இறுதி நாட்களை எண்ணிக்கொண்டிருந்த வேளையிலேயே சிங்கள பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை தமது அடிமைகளாக நடத்த வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு அதற்கேற்ப காய்நகர்த்தலில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர்.

தமிழ் மிதவாத அரசியல் தலைமைகள் இதனை உணர்ந்து செயற்படத்தொடங்கிய போதிலும் அவை என்றுமே தமது மக்கள் நலன் சார்ந்து செயற்படவில்லை என்பதே எமது கடந்த கால வரலாறு. 1946 ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. வடக்கு—கிழக்கில் தமிழ் மக்கள் தமது பரிபூரண ஆதரவினை 1944 ஆம் ஆண்டு உதயமான அகில இலங்கை தமிழ்க் காங்கிரசிற்கு வழங்கியிருந்தனர்.

நாடு சுதந்திரமடைந்ததும் அன்றைய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மலையக மக்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் பறிப்பதற்கு ஆதரவளித்து அதற்கு பிரதியுபகாரமாக அமைச்சுப்பதவியைப் பெற்று அரசாங்கத்தில் பங்கெடுத்தது. அதுவரைகாலமும் பிரதிநிதித்துவத்தில் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை முன்வைத்து வந்த அந்தக்கட்சி தனது கொள்கைகளைக் கைவிட்டு மக்கள் கொடுத்த ஆணையை மீறிச்செயற்பட்டிருந்தது. இதன் காரணமாகவே தந்தை செல்வா அகில இலங்கை தமிழ்க்காங்கிரசிலிருந்து வெளியேறி, இலங்கை தமிழரசுக்கட்சியைத் தோற்றுவித்தார்.

வடக்கு—கிழக்கில் ஒரு சுயாட்சியை ஏற்படுத்தும் வரை எத்தகைய அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்பதில்லை என்று தந்தை செல்வா உறுதியெடுத்திருந்தார். தந்தை செல்வாவின் இந்த உறுதி மொழி தமிழ் மக்கள் தமது ஆதரவினை அகில இலங்கை தமிழ் காங்கிரசிலிருந்து இலங்கை தமிழரசுக் கட்சியின்பால் மாற்றுவதற்கு வழிவகுத்திருந்தது.

எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலகி, 1951 ஆம் ஆண்டு சிறிலங்காசுதந்திரக்கட்சியை உருவாக்கியிருந்தார். தென்னிலங்கையின் இந்த இரண்டு பிரதான கட்சிகளும் தங்களில் யார் ஆட்சி அமைப்பது என்பதில் போட்டிபோட்டனவே தவிர, தமிழர்களின் மீது அடக்கு முறைகளை ஏவிவிடுவதில் அவை ஒன்றை ஒன்று மேவியே செயற்பட்டு வந்தன. இந்நிலையில், தமிழ்த் தலைமை பிரிந்திருப்பது மக்களுக்கு உகந்ததல்ல என்று அகில இலங்கை தமிழ்க்காங்கிரசும், இலங்கை தமிழரசுக்கட்சியும் உணர்ந்ததன் விளைவாகவே முதலில் தமிழர் ஐக்கிய முன்னணியும் பின்னர் தமிழர்விடுதலைக்கூட்டணியும் உருவாகின. இந்தக் கூட்டணியின் பெயரும் ஒரு குழப்பகரமானதாகவே இருந்தது. ஆங்கிலத்தில் தமிழ் யுனைடெட் லிபரேசன்ஃப்ரண்ட்(வுயஅடை ருஸீவைநன டுவீடிநசயவழைஸீ குசழவெ) என்றும் தமிழில் தமிழர் விடுதலைக்கூட்டணி என்றும் பெயர் சூட்டிக் கொண்டது. இதுவே 1976 இல் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தனது முதலாவது மாநாட்டில் தமிழீழப்பிரகடனத்தை வெளியிட்டது. இதுவே வட்டுக்கோட்டை தீர்மானம் என்று பலராலும் அழைக்கப்படுகிறது.

தந்தை செல்வாவும், அவரைத் தொடர்ந்து ஜிஜி பொன்னம்பலமும் 1976 இல் ஒருவர் பின் ஒருவராக மரணிக்க 1977 ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் வருகிறது. இதில் தந்தை செல்வாவின் வாரிசாக தன்னை வரித்துக் கொண்ட அமிர்தலிங்கமும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் தலைமைப் பதவியிலிருந்த சிவசிதம்பரமும் கைகோர்த்து ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியும், தங்களது வட்டுக்கோட்டை பிரகடனத்திற்கு உயிரூட்டும்படியும் மக்களிடம் ஆணை கேட்டனர். மக்களும் அவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து தமது முழுமையான ஆதரவினை வழங்கியிருந்தனர். இந்த தேர்தலில் ஜிஜி பொன்னம்பலம் அவர்களின் புதல்வர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தனக்கு வேட்பாளர் ஆசனம் வழங்குமாறு கேட்டிருந்தார். ஆனால் அமிர்தலிங்கம் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால் அவர் சுயேட்சையாகக் களமிறங்கினார். பின்னர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, அகில இலங்கை தமிழ் காங்கிரசைகூட்டணியிடமிருந்து மீட்டெடுத்துக்கொண்டார்.



தமிழர் விடுதலைக்கூட்டணி தோற்றம் பெற்ற நேரத்தில் காங்கிரசில் இருந்த அங்கத்தவர்கள் பெரும்பாலும் கூட்டணியிலேயே தங்கிவிட்ட போதிலும், தமிழரசுக்கட்சி மட்டுமேகூட்டணியில் எஞ்சியிருந்தது. இருப்பினும் இரண்டு கட்சியினரும் தம்மைகூட்டணியினர் என்று அழைத்துக் கொள்வதிலேயே மகிழ்ச்சியடைந்தனர். இந்த நேரத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியும் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காகவே தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். அவ்வப்போது தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மேடைகளில் தமிழீழமே எமது இறுதி இலட்சியம் என்று முழங்கி வந்தனர். தேர்தல் நேரங்களில் அல்லது அதனை அண்மித்த காலங்களில் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக நாடகமாடினர். அவர்களின் சிறிய சமிக்ஞைகூட அரசினால் தீவிரமாக முடக்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான் மையுடன் ஆட்சியைக் கைப்பற்ற, தமிழர் விடுதலைக் கூட்டணி பதினெட்டு ஆசனங்களுடன் இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சியாக தடம்பதித்தது. தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து வெற்றியீட்டிய கூட்டணிதலைவர்களிடம் ஈழத்திற்கான அரசியலமைப்பு சபையை அமையுங்கள் என்று இளைஞர்கள் கேட்டபோது, 'எங்களுக்கு எதிர்க்கட்சிதலைவர் பதவி கிடைத்துள்ளது. இது சர்வதேச ராஜதந்திரிகளுடன் தொடர்பு கொள்வதற்கும் எமது பிரச்சினைகளை ஐ.நா. சபை உள்ளிட்ட சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கும் ஒருவாய்ப்பாக அமையும். நாங்கள் வித்தியாசமான எதிர்க்கட்சியாக செயல்படுவோம் என்று அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

இளைஞர்கள் தொடர்ந்தும் அடுத்த ஐந்து மாதத்திற்குள் ஈழத்திற்கான அரசியல் யாப்பை உருவாக்க வேண்டும் என்று வற்புறுத்தவே, 'ஐந்து மாதத்திற்குள் நீங்கள் எதற்கும் தயாராக இருக்கக்கூடிய ஐயாயிரம் இளைஞர்களைத் தயாரப்படுத்துங்கள். நான் எனது பதவியைப் பயன்படுத்தி அவர்களுக்கு அனைத்துப் பயிற்சிகளையும் அளித்து ஆயுதம் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் பெற்றுக் கொடுக்கிறேன்' என்று அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

ஒரு புறம் தமது தலைவர்களின் நாடகம், மறுபுறம் தமிழ் மக்கள் உண்மையாகவே அணிதிரண்டுவிடக்கூடாது என்பதில் அரசுக்கு இருந்த அக்கறை ஆகியவை தமிழ் இளைஞர்களை மாற்று வழியில் சிந்திப்பதற்கு நிர்ப்பந்தத்தின. தமது முயற்சிகள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகிப்போனதை உணர்ந்து கொண்ட தமிழ் இளைஞர்கள் இனி தமது தலைவர்களை நம்புவதில் பயனில்லை என்ற எண்ணத்துடன் உலக நாடுகளின் தேசிய இனங்கள் பல தமது வெற்றியை ஆயுதப் போராட்டத்தினூடாகவே முன்னெடுத்து வெற்றி கண்டுள்ளன என்ற வரலாற்றுப்பாடத்தின் அடிப்படையில் ஆயுதப்போராட்டத்தில் நாட்டம் கொண்டனர்.

இளைஞர்கள் ஒன்று திரள மாட்டார்கள் என்ற எண்ணத்தில் தலைவர்கள் ஐயாயிரம் இளைஞர்களைத் திரட்டும்படிகோர அவர்கள் இனி தலைவர்களை நம்புவதில் பயனில்லை என்று தம் வழியை தாமே அமைத்துக் கொள்ள முடிவெடுத்தனர். ஆயுதபோராட்டத்திற்கு வித்திட்ட மிதவாதத்தலைமை, உண்மையிலேயே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தயாராக இருந்த போது 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலையை சாட்டாக வைத்து இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளில் அரசியல் அஞ்ஞாதவாசம் மேற்கொண்டது.

அன்றைய தலைமை ஆயுதப் போராட்டத்தையும் பாராளுமன்ற அரசியலையும் இணையாகக் கையாண்டிருக்குமானால், தமிழ் மக்கள் மத்தியில் இவ்வளவு ஆயுதக் குழுக்களும் தோன்றியிருக்காது. இன்றைய அவலநிலையும் தோன்றியிருக்காது. உலக

தொடர்ச்சி 9 ம் பக்கம்

## 4ம் பக்க தொடர்சி- இராணுவமயமாக்கலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கின்றதா?

நிபந்தனையற்று ஆதரித்து சிங்கள அரசை வலுப்படுத்திய பெருமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே சாரும்.

வரவு செலவுத்திட்டத்தை ஆதரிப்பதன் மூலம்மூன்றில்இரண்டுபெரும்பான்மை பலத்தை உறுதிப்படுத்திக் காண்பித்தால் தான் ரணில் தலைமையிலான அரசு மூலம் அரசியல் தீர்வு ஒன்றை நாம் எட்டமுடியும் என்பதே தான் வழங்கிய ஆதரவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்மந்தன் அவர்கள் தமது உறுப்பினர்களுக்கு அளித்த விளக்கமாகும்.


ஆனால்சிங்கள கட்சிகள் தமது தமிழர் எதிர்ப்பு மனநிலையில் இருந்து ஒரு அங்குலம் தன்னும் நகரப்போவதில்லை என்பது உலகத்;தமிழ் இனம் அறிந்த உண்மை எனினும் தன்னை ஒரு அரசியல் சாணக்கியர் எனக் கருதும் சம்பந்தருக்கு அது எவ்வாறு தெரியாமல் போனது?.

இதில் என்ன வேடிக்கை என்றால், கடந்த 3 வரவு செலவுத்திட்டங்களிலும் சிறீலங்கா படைத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு மிகவும் அதிகம். அதாவது 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் போர் தீவிரமாக இடம்பெற்ற போது மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்பை விட மிக அதிகம். அதனை அறிவதற்கு நீங்கள் கீழே உள்ள தரவுகளை பார்க்கலாம்.

| ஆண்டுகள் | பாதுகாப்புச் செலவு (பில்லியன் ரூபாய்கள்) |
|---|---|
| 2008 | 166 |
| 2009 | 177 |
| 2016 | 307 |
| 2017 | 284 |
| 2018 | 290 |
| 2019 | 06 |

2008 ஆம் ஆண்டு சிறீலங்கா அரசு மிகப்பெரும் ஒதுக்கீடு ஒன்றை செய்திருந்தது அதற்கான காரணம் அதன் வான்படையின் அதிகரிப்பாகும், அதாவது சிறீலங்கா வான்படை 25விகித வளர்ச்சியை கண்டிருந்தது அதற்கான ஆயுதக் கொள்வனவுக்கே சிங்கள அரசு மிகப்பெரும் நிதியை ஒதுக்கியிருந்தது.

அதன் பின்னர் 2009 ஆண்டு 177 பில்லியன் ரூபாய்களை சிங்கள அரசு ஒதுக்கியதுடன், அதற்கு மேலதிகமான 15 விகித நிதியை ஒதுக்கி தமிழ் மக்கள் மீதான மிகப்பெரும் இனப்போர மேற்கொள்வதற்கு தேவையான 25,000 இராணுத்தினரை மேலதிகமாக படையில் இணைத்திருந்தது.



அதாவது போரின் போது சிறீலங்கா அரசு ஒதுக்கிய நிதிக்கான காரணங்கள் உண்டு. ஆனால் போர் நிறைவடைந்த பின்னர் போரின் போது செலவிட்ட தொகையை விட அதிக தொகையை சிறீலங்கா அரசு செலவிட காரணம் என்ன?

ஆம் தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் இராணுவமயமாக்கல், சிங்கள குடியேற்றங்கள், படையினரின் குடும்பங்களை குடியேற்றுதல், அவர்களை பராமரித்தல், சிறீலங்கா படையினர் மூலம் மேற்கொள்ளப்படும் உதவிகள் மூலம் தமிழ் மக்களின் மனங்களை வென்று தமிழ் பிரதேசத்தில் சிங்களப் படையினரின் நிரந்தரமான இருப்புக்கு வழிஏற்படுத்துதல் என்பவற்றிற்காக ஒதுக்கப்படும் நிதியே இதுவாகும்.

வெள்ளம் வரும்போது சிறீலங்கா இராணுவம் ஓடிச்சென்று மீட்புப் பணிகளைச் செய்கின்றது, ஆலயங்களை புனரமைக்கின்றது, தமிழ் பகுதிகளில் பௌத்த மயமாக்கலை மேற்கொள்கின்றது, சுற்றுலா விடுதிகளை கட்டுகின்றது, ஆலயங்களில் அங்கு செல்பவர்கள் இளைப்பாற மடங்களைக் கட்டுகின்றது இவ்வாறு சிறீலங்கா படையினரால் மேற்கொள்ளப்படும் பல நூறு செயற்திட்டங்களை நான் இங்கு குறிப்பிட முடியும். ஆனால் அதற்கு இங்கு இடம் போதாது.

அதாவது பாதுகாப்புச் செலவீடு என ஒதுக்கப்படும் நிதி மூலம் சிறீலங்கா படைத்தரப்பு தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மயமாக்கலையும்,இராணுவமயமாக்கலையும் சத்தமின்றி செய்து வருகின்றது. அது மட்டுமல்லாது, அந்த நிதியை பயன்படுத்தி தமிழ் அரசியல்வாதிகளை தனக்கு சாதகமாகவும் திருப்பியுள்ளது. இந்த நிதியே தனக்கு சாதகமான தமிழ் அரசியல்வாதிகளின் தேர்தல் செலவுக்காக இரகசியமாக வழங்கப்படும் நிதியாகும். ஏனெனில் பாதுகாப்புச் செலவீனத்தின் கணக்குக்களை யாரும் சரிபார்க்க முடியாது, அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்ற காரணத்தை முன்வைத்து எல்லோரினதும் வாயையும் மூடிவிடலாம்.



தற்போது எதிர்வரும் ஜனவரி மாதம் சிறீலங்கா அரசு கொண்டுவரவுள்ள வரவுசெலவுத்திட்டத்திலும் மிக அதிக தொகை பாதுகாப்பு செலவீனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்த வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டதை விட 1000 கோடிகள் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அது மட்டுமல்லாது 2023 ஆம் ஆண்டு வரையிலும் சிறீலங்கா அரசு இவ்வாறான மிகப்பெரும் தெகையையே படைத்தரப்புக்கு ஒதுக்கப்போகின்றது என பாதுகாப்பு புலனாய்வு மையம் (Strategic Defence Intelligence - SDI) தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் சிறீலங்கா அரசு தனது வரவுசெலவுத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுகள் தேவை.

ஆனால் வழமைபோல வடக்கு கிழக்கில் இருந்து படையிரை வெளியேற்றுவோம், படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்போம், அரசியல் கைதிகளை விடுவிப்போம் என கூறிக்கொண்டு இராணுவமயமாக்கலை ஊக்குவிக்கும் வரவுசெலவுத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பது என்பது ஒரு அரசியல் ஏமாற்றுத்தனமாகும்.

எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தை நிபந்தனையற்று ஆதரித்து தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும் இராணுவமயமாக்கலை தமிழத் தேசியக் கூட்டமைப்பு நேரிடையாக ஆதரிக்கப்போகின்றதா அல்லது அதனை ஒரு பேரம்பேசும் அரசியல் பொருளாக்கி தமிழ் மக்களின் சில கோரிக்கைகளையாவது சிறீலங்கா அரசிடம் இருந்து பெறப்போகின்றதா என்பதே தற்போதைய கேள்வி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் அவர்களிடம் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் வறட்சி;யானது அவர்களுக்கு சிங்கள அரசிடம் சரணடையும் நிலையையும், ரணிலா — மகிந்தவா என்ற ஒரு மலிவான அரசியலையும் மேற்கொள்ளும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் அவர்களை தெளிவுபடுத்தி எமது கோரிக்கைளை நிறைவேற்றக் கிடைக்கும் பேரம்பேசும் அரசியல் சந்தர்ப்பங்களை தவறவிடாது பயன்படுத்தும் அழுத்தங்களை தமிழ் மக்கள் அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

சிறீலங்கா அரசின் வரவுசெலவுத்;திட்டத்தை நிபந்தனை அற்ற முறையில் ஆதரிக்க வேண்டாம் என்ற கோரிக்கைகளை தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முன்வைப்பதுடன், அதற்கான ஜனநாயகப் போராட்டங்கள் தொடர்பிலும் தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் உள்ள மக்கள் சிந்திக்க வேண்டும்.

இது தொடர்பில் ஏற்படும் எமது விழிப்புணர்வானது அனைத்துலக மட்டத்தில்; ஒரு தாக்கத்தை எற்படுத்தும் என்பதுடன் முக்கியத்துவமும் பெறும் ஏனெனில் தமிழ் மக்கள் தமது பிரதிநி— திகளிடம் தமது கோரிக்கைகளை முன்வைத்து போராடுகின்றனர் என்ற கருத்துக்கு அதிக பெறுமதி உள்ளது.

அதற்கான முன்னெடுப்புக்களை தமிழ் இன ஆர்வலர்களும், மாணவர்களும், தமிழ் மக்களும் முன்னெடுக்க வேண்டும். தமிழ் அரசியல்வாதிகளை கட்டுப்படுத்;தும் சக்தி ஒன்று மக்களிடம் உண்டு என்பதை நாம் உலகிற்கும், சிறீலங்கா அரசுக்கும் உணர்த்தும் தருணமிது என்பதுடன், போரினால் பாதிக்கப்பட்டு தற்போதும் நடு வீதியில் கிடந்து தமது வாழ் நிலங்களுக்காகவும், தமது உறவினர்களின் விடுதலைக்காகவும் போராடும் மக்களுக்கு நாம் ஆற்றும் சிறு உதவி இது.

# வெள்ள அனர்த்தமும் பின்னுள்ள அரசியலும்.

தீபச்செல்வன்

போரால் பல தடவைகள் அழிவை சந்தித்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் இயற்கையின் சீற்றத்தாலும் அவ்வப்போது பாதிப்பை எதிர்நோக்கி வருவது வருத்தத்திற்குரியது.

மாரிகாலங்களில் வடக்கில் வவுனியா வடக்கு முதல் ஏ9 வீதியின் இருமருங்கும் வெள்ளப்பெருக்கேற்பட்டு வடிந்து போவது வழமையான ஒன்று. எனினும் அவ்வப்போது அவசரநிலைமைகளை தோற்றுவிப்பதும் அவ்வவ்வூர் மக்களே அதை எதிர்கொள்வதும் முகாமைத்துவம் செய்வதும் வழமை. குறிப்பாக கடந்த சிலநாட்களில் வடக்கில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கில் கிளிநொச்சி பலத்த இழப்புக்கும் பாதிப்புக்கும் முகம்கொடுத்திருக்கின்றது. இரண்டு நாட்களாக தொடர்ந்த அடைமழையினால் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா போன்ற மாவட்டங்களை சேர்ந்த சுமார் இரண்டு லட்சம் மக்கள் பொதுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் பனையால் விழுந்தவனை மாடேறிமிதித்த கதையாகிவிட்டது போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலமை.

வெள்ளம் வீடுகளுக்குள் நுழைந்ததும் கிராமங்களே வெள்ளக்காடாகமாறியதும் மக்கள் இடுப்பு முதல் மார்பு வரையான வெள்ளத்தில் தத்தளித்த காட்சிகளையும் ஊடகங்களூடாக புகைப்படங்களாகவும் வீடியோக்களாகவும் வாசகர்கள் பார்த்திருக்கக்கூடும். இந்த வெள்ளத்திற்குள் நடந்த சில கள்ளத்தனமான முயற்சிகளை அவதானத்திற்கு கொண்டுவர இப்பத்தி முயல்கின்றது.

கிளிநொச்சியில் வெள்ளம் 21ம் திகதி இரவு பன்னிரண்டு மணியவில் தொடங்கியது. காலை ஒன்பது மணிவரை வெள்ளம் கூடிக்கொண்டு இருந்தது. பின்னதாக வெள்ளம் வற்றத் துவங்கியது. கிளிநொச்சியில் உள்ள பல கிராமங்களில் இளைஞர்கள் சுயாதீனமாக இறங்கி மக்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் இராணுவத்தினர் பிரதான வீதிகளில் இறக்கப்பட்டனர். மக்களோ தொலைதூரகிராமங்களில் வெள்ளத்தில் அந்தரப்பட்டனர். பல மணி நேரங்களாக அவர்கள் கால்களுக்குள் வெள்ளத்திற்குள் ஈரத்துடன் நின்றனர். இயல்பாகவே அடுத்தவருக்கு உதவும் தமிழினத்தின் சமூகப்பண்பும் பிணைப்பு மேமுதலில் ஒருவருக்கொருவர் உதவி செய்து உயிர் மற்றும் உடமைகளை முடிந்தவரை பாதுகாக்கசெய்தது . வெள்ளம் வற்றத்துவங்கிய நிலையிலேயே சில அண்மித்தகிராமங்களுக்குள் இராணுவத்தினர் உள்நுழைந்தனர். இராணுவத்திற்கோ இந்த வெள்ளம்பெரும் கொண்டாட்டம். தீபாவளிப்பண்டிகைபோல இராணுவத்தின்கூச்சல்களும் கொந்தாய்களும் ஊரை அதிரச்செய்தது. இது பல மக்களை முகம்கோணச் செய்தது. அவர்கள் பெண் பிள்ளைகளை அணைத்துதூக்கிச் செல்ல பெருவிருப்புடன் தயாராக இருந்தார்கள் அதுவும் முழங்காலுக்கு கீழான வெள்ளத்தில் கூடதூக்கிச் செல்ல ஆர்வத்துடன் வந்தார்கள். இடையே ஒரு முதியவரின் முள்ளந்தண்டு முறிவடையும் வகையில் "பக்குவமாக' காவியகாட்சிகளையும் பார்த்திருப்பீர்கள்.





இராணுவச்சீருடை இல்லாத போதும் நாய்கள் மாத்திரம் இராணுவத்தினரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவைகள் குரைத்துக் கொண்டே நின்றன. இராணுவத்தினர் ஒருவரை தூக்கிக் கொண்டு செல்வதை பத்து இராணுவத்தினர் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். சடசடவென புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. கிளிநொச்சியில் இரத்தினபுரத்தில் உள்ள பலமக்கள் இராணுவத்தினருடன் செல்லவோ அவர்களின் படகில் ஏறவோ மறுத்து வெள்ளத்திற்குள் சென்றார்கள். வீடுகளை விட்டு வெளியேறாமல் இருந்தார்கள். இரத்தினபுரம் 16 வீட்டுத்திட்ட மக்கள் ஒருவர் கூட இராணுவத்தினருடன் செல்லவில்லை.

இரத்தினபுரம்16 வீட்டுத்திட்ட மக்கள் பற்றிய சில விடயங்களை சொல்ல வேண்டும். அவர்கள் போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள். தமது பூர்வீக நிலங்களை இழந்தவர்கள். இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் தனியார் ஒருவரிடம் பணம் கொடுத்து காணி ஒன்று வாங்கப்பட்டு 16 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அனைவரும் போராளி மாவீரர் குடும்பங்கள். போரால் ஏதோ ஒருபாதிப்புக்கு உள்ளானவர்கள். காணியை விற்றுச் சென்ற சந்தர்ப்பவாதி யொருவர் தற்போது அந்த மக்களின் காணியை மீளக்கைப் பற்ற முயற்சிகளை மேற்கொண்டுவருவதால் போரின் அழிவிற்குப்பின் தற்காலிக வீடுகளில் மீள் குடியேறிய அவர்களுக்கு ஏற்கனவே மக்களை வஞ் சிக்கவும் அவர்களுக்கான உதவிகளை வழங்கவும் விரும்பாத அரச நிர்வாகம் இதுதான் நல்லசாட்டு என்று இந்த மக்களுக்கு வீட்டுதிட்டத்தில் இடம் வழங்கவில்லை. இன்று மீள்குடியேறி பத்துவருடங்கள் ஆகப்போகின்றன. இந்த மக்களுக்கு பத்து வருடங்களும் அவ்வப்போது வெள்ளம் தான். வரலாறுகாணாத அடைமழை வெள்ளத்தால் இம்மக்களின் வீடுகள் பாதியளவுக்கு வெள்ளத்தில் மூழ்கிப்போயின. செத்தாலும் நாங்கள் வரமாட்டோம் என்று அவர்கள் வீடுகளுக்குள் நின்றதும் ஒரு போராட்டம்தான் .இந்த மக்கள் வெள்ளம் வற்றி காய்ந்தவுடன் மறக்கப்பட்டு விடுவார்கள்.

இம்முறை வெள்ளத்திலும் இந்த மக்கள் தொடர்பில் "அதிகாரிகள்" உரிய தீர்மானத்தை எடுக்கவில்லை. இவர்களோ கடுமையான வெறுப்பும் வேதனையும் அடைந்த நிலையில் வாழ்கிறார்கள். வெள்ளத்தின் அவலம் மிகுந்த புகைப்படங்களில் இவர்கள் ஆண்டுதோறும் தான் இடம் பெறுகிறார்கள். இந்த மக்களுக்கு பாதுகாப்பான நிரந்தர வீடு ஒன்றினை கட்டிக் கொடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. வீடின் றிதற்காலிக வீடுகளிலும் இவர்களின் அவலம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இப்பகுதியில் வசிக்கும் இலட்சுமணனன் கன்னியம் மாதம் பதிகளின் கதை இன்னும் சோகமானது.

இவர்களின் வீடு ஒரு தகரத்தினால் ஆன தற்காலிக வீடு. அந்த வீட்டுக்கு இப்போது பத்து வயதுகள் ஆகப்போகின்றன. தற்காலிக வீடுகள் பெரும்பாலும் ஆறுமாதம் அல்லது ஒருவருடத்திற்கு தான் தாங்கும். பின்னர் மெல்ல மெல்ல உடைந்து கொட்டத் துவங்கும். அப்படியொரு வீட்டில் வாழும் இவர்களுக்கு எண்பத்தைந்துவயது. வெள்ளத்திற்குளிலிருந்து வெளியேறி உறவினர்களின் வீட்டில் தங்கியிருந்தார்கள். நினைவற்றகன்னியம்மா உட்காரவும் எழுந்துகொள்ளவும் முடியாத லட்சுமணன். இடைத்தங்கல் முகாமில் தமது கடமைகளை தாமே செய்து கொள்ள முடியாதவர்கள். உறவினர் ஒருவர் தான் இவர்களின் கடமைகளை நிறைவேற்றுகிறார்.

அப்பகுதிக்குச் சென்று பார்த்தபோது யாரோ கொடுத்த ரொட்டித்துண்டுகளை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். “தம்பி எங்களுக்கு ஒரு நிவாரணமும் தரவில்லை. கேட்டால் பள்ளிக்கூடத்திற்கு வந்து பதிவு செய்துவிட்டு அங்கே காத்திருங்கள் என்கிறார்கள். நம்மலாலை முடியுமா” என்று ஆதங்கமாக கேட்டார். எல்லாவித்திலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ்வனர்த்தத்தின்

தொடர்ச்சி 10ம் பக்கம்

# புலிகள் ஜனநாயகத்தை மறுத்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

## யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றிய தலைவர் கி. கிருஷ்ணமீனன்

கருணா டக்ளஸ் தேவானந்தா விஜயகலா தொடங்கி இப்போது சுமந்திரன் வரைக்கும்போட்டிபோட்டு சிங்கள அரசாங்கத்துக்கு சாமரம் வீசுகிறார்கள்.

விடுதலைப்புலிகள் ஜனநாயகத்தை மறுத்தார்கள் என பொய் பிரச்சாரத்தை சுமந்திரன் கூறுகிறார்.விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள் காரணம் ஜனநாயகத்தை அவ்வளவு தூரம் அவர்கள் மதித்தார்கள் என்பதையே காட்டுகிறது.சுமந்திரன் சொல்வது போன்று ஜனநாயகத்தை மறுத்திருந்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கியிருக்க மாட்டார்கள்.

அவர்கள் உருவாக்கிய அதே கூட்டமைப்பில் இருந்து கொண்டுதான் இன்று தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை கூறிவருகின்றார் சுமந்திரன்.

சிங்களவர்களிடம் இருந்து தமிழ்க் கட்சிகள் பல விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். காரணம் அன்று தொட்டு இன்றுவரை அவர்கள் எங்கள் விடயத்தில் ஒற்றுமையாகத் தான் இருக்கிறார்கள்.என்னதான் உள்வீட்டுச் சண்டை இருந்தாலும் அடுத்த நாள் அவர்கள் ஒன்றாகி விடுவார்கள் அதுதான் வரலாறு.

தென்னிலங்கையின் அரசியல் அசாதாரண சூழ்நிலையை அண்மையில் ஏற்படுத்தியதும் ஏற்கனவே திட்டமிட்டு ஏற்படுத்திய நாடகமே. தென்னிலங்கையின் ஜனநாயகத்தை காப்பாற்றி விட்டோம் என்று சுமந்திரன் உட்பட தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் யாவருமே கூறி வருகிறார்கள். இன்று தென் இலங்கை அரசாங்கமே சுமந்திரன் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறது.

அது ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல்தான். காரணம் தமிழ் மக்கள் எல்லோரும் அவரின் பேச்சைக் கேட்க வேண்டும் என்றொரு மாயை உருவாக்கி விடப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மக்கள் சுமந்திரன் பேச்சை கேட்பார்கள் என்ற நிலை உருவாகி விட்டால் வடக்கு கிழக்கு தென் இலங்கை அரசாங்கத்தின் கைகளில் தான். இலங்கையின் வரலாற்றில் இப்படி பலமுறை சிங்கள ஜனநாயகத்தை தமிழர் தரப்பு காப்பாற்றிவிட்டு இருக்கிறது இதெல்லாம் புதிய விடையமே இல்லை.

2009 முன்பும் சரி பின்பும் சரி சகுனி ரணில் அரசாங்கம் சரியான முறையில் காய்களை நகர்த்தி வருகிறது.இப்போது வடக்கு—கிழக்கு தழுவியே சிங்கள அரசாங்கத்தின் ஆள காலூன்றும் வேலைத்திட்டங்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் வாக்குவங்கிகளை பலப்படுத்தி வருகிறது ரணில் அரசாங்கம்.

இது இப்படியே போனால் வடக்கு கிழக்கு அதிகாரங்கள் யாவுமே அவர்கள் கையில் வரும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கூற முடியாது.

இனிவருங்காலங்களில் இலகுவாக சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் மக்களின் பொருளாதார சுரண்டல்கள் பௌத்த பரம்பல்இ நில அபகரிப்பு என கூறிக்கொண்டே போகலாம்.

ஈழப்போராட்ட வரலாற்றில் துரோகத்தை கருணா மாத்தயா போன்ற பலர் புரிந்தபோது அது தமது அமைப்பாக இருப்பினும் அதனை விடுதலைப்புலிகள் ஏற்கவில்லை. அதுபோல தற்போதைய நிலையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பல துரோகங்களை இழைத்து விட்டது.அரசியல் என்பதே இனத்தின் காப்பரண் அதனை சரணாகதி அரசியலுக்கு கொண்டுவந்து இனம் நிலம் மொழி பண்பாட்டு மக்கள் கூட்டம் கொண்ட தேசிய இனத்தின் இறைமையை தாரைவார்த்தால் எமது தேச மக்களின் அபிமானத்தை இழப்பது திண்ணம் என தெரிவித்தார்.

---

## 6ம் பக்க தொடர்ச்சி- தமிழரசுக்கட்சியின் புதுத்தலைகள் வரலாறு அறிந்து பேசவேண்டும்

நாடுகள் பலவற்றில் தேசிய இனங்கள் அல்லது ஒடுக்கப்பட்டவர்க்கங்கள் பாராளுமன்ற அரசியலிலும் ஆயுதப்போராட்டத்திலும் ஒரே குறிக்கோளுக்காக இரு வேறு தளங்களில் செயற்பட்டே தமது வெற்றி இலக்கை அடைந்துள்ளன.

இலங்கையின் மிதவாதத் தலைமை தான்விட்ட தவறை உணராமல், ஏதோ ஆயுதப் போராட்டம் என்பது ஒரு சமூக விரோதச் செயல் போல இன்று நடித்து, தமது அடிவருடிகளையும் உசுப்பேத்தி ஆயுதப் போராட்டத்தையே கொச்சைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. பல்வேறு சதிகளின் காரணமாக மௌனிக்கச் செய்யப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் பின்னர், தமிழீழ விடுதலைப்புலிகளின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமை மீண்டும் மிதவாதத் தலைமை என்று தம்மை போலியாக அழைத்துக் கொள்ளும் தமிழர் விடுதலைக்கூட்டணியிடம் அவர்களின் வயோதிபம் மற்றும் பாராளுமன்ற அரசியல் அனுபவம் ஆகியவற்றைக் கணக்கிலெடுத்து கையளிக்கப்பட்டது, அவ்வாறே இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னத்தைப் பயன்படுத்துவதற்கும் ஏனைய கட்சிகளிலிருந்து இளையதலைமுறை வேட்பாளர்களை நிறுத்தவும் உடன்பாடு காணப்பட்டது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்ட 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை தமிழரசுக்கட்சி தனது மாநாட்டை நடத்தி தனது செயற்பாட்டை தேர்தல்கள் ஆணையகத்திற்குத் தெரியப்படுத்தாவிடில், அந்தக்கட்சியின் இருப்பே கேள்விக் குறியாகியிருக்கும். அந்தவேளையில், இன்று தம்மை தமிழரசுக்கட்சியினர் என்று அழைத்துக் கொள்வதில் பெருமைப்படும் பெரும்பாலானவர்கள் அச்சத்தின் காரணமாக வெளியில் வருவதற்கு அஞ்சினர். ஆயுதப் போராட்டத்தில் இருந்து ஜனநாயக அரசியலுக்குத் திரும்பியிருந்தவர்களே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒற்றுமையைக் காப்பதற்காக அந்தக்கட்சிக்கு ஒட்சிசன் கொடுத்து உயிரூட்டினர். இன்று தமக்கு உயிர்ப்பிச்சை அளித்தவர்களையே தமிழரசுக்கட்சி எட்டி உதைக்கிறது.

விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழு தலைவர் பதவியை வழங்கி முதலில் அவர்களுக்கு அரசியல் மறுவாழ்வு கொடுத்தனர். பின்னர் ஏனைய குழுவினர் தமிழ் மக்களின் ஒற்றுமையை கருத்தில் கொண்டு, தந்தை செல்வாவே தவிர்த்து விட்ட தமிழரசுக் கட்சியின் பெயரை ஏற்றுக் கொண்டு அக்கட்சிக்கு உயிர் கொடுத்து காப்பாற்றினர். இவை அனைத்தையும் பெற்றுக் கொண்டு இன்று அந்தக்கட்சி ஏறி வந்த ஏணியையே எட்டி உதைக்கிறது. இந்த வரலாறு தெரியாத, போராட்டத்தில் ஒரு சிறு பங்களிப்பும் செய்யாத, தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுவிட்டால் தாமும் ஓர் சிற்றரசர் என்ற மயக்கத்தில் விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஏனைய இயக்கங்கள் மீது சேறுபூசும் தறுதலைகளும் தம்மை பெருவீரனாக நினைத்து வலம்வருவது தான் தமிழினத்தின் சாபக்கேடு.

ஆயுதங்களற்ற நிலையில், வாய்ச் சொல்லிலேயே இவர்கள் இப்படி நடந்துகொள்ளும் போது இவர்களிடம் ஆயுதங்கள் இருந்திருக்குமானால் என்ன நிலை? வரலாறு தெரியாத அறிவிலிகள் ஏதோ அரைகுறை ஏட்டுப்படிப்பைப்படித்து விட்டு இறுமாப்பில் துள்ளும் இவர்கள்,மரணத்தை மட்டுமே எதிர்பார்த்திருந்து களமாடிய போராளிகளின் தியாகங்களுக்குக் கிட்டவும் நிற்கமுடியாது. சம்பந்தர் ஒரு புறம் விடுதலைப்புலிகளின் கொலைப்பட்டியலில் தனது பெயரும் இருந்ததாகக் கூறுகிறார். பின்னர், அவரே தமிழ்ச்செல்வன் முன்னேசெல்ல, கோப்புக்களைக் கையில் கொண்டு பின்னே செல்கிறார். இந்த நிலை உருவாக என்ன காரணம் என்று இந்த அரைகுறைக்குத் தெரியுமா? அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பேசுகையில் சிறைச்சாலையின் திறப்பு என்னிடமா இருக்கிறது என்று போராளிகளைக் கொச்சைப்படுத்தியதுடன், அரசியல் கைதிகளின் விடுதலைக்கு சட்டச்சிக்கல் இருப்பதாகக் கூறும் சம்பந்தனும் சுமந்திரனும் தேர்தல் காலங்களில் அரசியல் நடவடிக்கையின் மூலமே அவர்களை விடுவிக்க முடியும் என்று பல்டி அடிப்பது ஏன்? இது குறித்து அந்த அரைவேக்காட்டின் நிலை என்ன?

தன்னை ரவிராஜின் மறுபிறப்பாகநினைத்து கற்பனையில் வலம் வரும் சயந்தன்களும் அவரின் கருத்துக்கு நேற்று உயிர்கொடுத்துள்ள சுமந்திரனும் இனிபொதுவெளியில் அரசியல் வரலாறறிந்து கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். எந்த தியாகத்தின் மேலே ஏறி நின்று வாக்கு கேட்டு வென்றீர்களோ அந்த உறவுகள் தமது அன்பிற்கினியவர்களின் விடுதலை வேண்டியும், தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிவதற்காகவும், யுத்தம் என்ற பெயரால் தமது காணிகளில ;இலங்கை இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிப்பதற்காகவும் வீதிகளில் இறங்கி போராடிவருகின்றனர். இந்த விடயமாக ஒரு நாளாவது அனைத்து தூதரக அதிகாரிகளையும் ஒருங்கிணைத்து இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று உங்கள் சட்டப் புலமையை நீங்கள் பயன்படுத்தியுள்ளீர்களா? இவ்விடயம் குறித்து உங்களது தலைவர்களுடன் நீண்ட விவாதம் நடத்தியதுண்டா?

ராஜதந்திரரீதியிலும், நீதித் துறையினூடாகவும், பாராளு மன்றத்தினூடாகவும்,நிறைவேற்று அதிகாரத்தினூடாகவும் தமிழர்களின் பிரச்சினைகளை அணுகுவதற்கு மக்கள் செயற்பட்ட காலத்தில் இந்த சந்தர்ப்பவாத அரைகுறை சட்டத்தரணி, குடும்பங்களைப் பிரித்து வைத்ததைத்தவிர வேறு என்ன செய்து கொண்டிருந்தார்? இனியாவது இத்தகைய அரைகுறைகள் திருந்த வேண்டும். மக்கள் குடியிருக்காத வீட்டில் விசக்காளான்களாக முளைத்திருக்கும் களைகளே,எமது மக்களுக்கு எதுவும் செய்யாமல் இருந்தாலும் பரவாயில்லை குறைந்தபட்சம் போராட்டத்தின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட தேசிய உணர்வையும் எழுச்சியையும் மழுங்கடிக்காதிருங்கள். உங்களுக்கு தேவைப்படும் போது மலரஞ் சலி செலுத்துவதற்கும், தேவையற்ற போது வசைபாடுவதற்கும் அவர்கள் ஒன்றும் கண் காணாத கற்கடவுள்களோ, உங்களைப்போல் தேர்தல் கால பிச்சைக்காக ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களோ அல்ல. முடிந்தால் அந்தப் புனிதர்களை தொடருங்கள் அல்லது அவர்கள் பெயரை உச்சரிப்பதையாவது தவிர்த்து கொள்ளுங்கள்.

## 3ம் பக்க தொடர்ச்சி

என்ற நோக்கில் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டோம்.தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கைக்கு அமைவாக பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது.

அப்போது கொழும்பில் இருந்த சமூகவியலாளர்கள், புத்திஜீவிகளின் பிரசன்னத்துடன் தமிழர்விடுதலைக்கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (ஈபிஆர்.எல்.எப்) ஆகிய கட்சிகள் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதற்கு புலிகள் தமது ஆதரவினை தருவதாக அறிவித்தார்கள். புலிகளின் ஆதரவினால்தான் நாம் பாராளுமன்ற ஆசனத்தை அதிகமாக பெற்றோம்.

ஆகவே ஒரு சிலர் கூறுவதை போல ஆயுத குழுக்களுக்கு ஆதரவு இருக்கவில்லை என்றால் எமக்கு மக்கள் வாக்களித்திருக்க மாட்டார்கள்.

இவை புரிந்துணர்வு அடிப்படையில் செய்யப்பட்ட விடயமே தவிர டீலே அச்சுறுத்தலோ என்பது தவறானது. விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு பிரதிநிதிகளின் ஏற்பாட்டில்தான் த. தே. கூட்டமைப்பின் உயர்மட்ட குழு 15 ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இவ்வாறு செயற்பட்டதை வியாபாரப்படுத்துவது போல் அவை அனைத்தையும் கொச்சைப்படுத்துவதற்கான வார்த்தைப்பிரயோகமாக சயந்தனின் கருத்து அமைந்துள்ளது.

புலிகளை பொறுத்தவரையில் அவர்கள்உணர்வு பூர்வமாக உள்ளார்ந்த ரீதியாக மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காக அனைவரையும் ஒன்றிணைத்தார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் புலிகளால் எடுக்கப்பட்ட முடிவுகள் எம்முடன் கலந்துரையாடப்பட்டுத்தான் எடுக்கப் பட்டது.

விடுதலைப்புலிகளுக்கு பயந்து செயற்பட்டோமோ அல்லது அவர்களுடன் வர்த்தக உடனபடிக்கைசெய்துகொண்டோம் என்பது உண்மையில்லை. பேரம் பேசும் நடவடிக்கையில் ஈடுபட்டதென்பது தவறு.

சயந்தனுடைய கருத்து தமிழரசுக்கட்சியில் உள்ள ஒருசில உறுப்பினர்களுடைய எண்ணப்பாட்டை பிரதிபலித்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் அங்கம் வகிந்தவன் என்ற ரீதியில் அங்கு நடந்தவற்றை கூற வேண்டிய கடமை எனக்குள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்தில் விடுதலைப்புலிகள் பங்கேற்கவில்லைஎன அண்மைக்காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார் அதை நாம் திட்டவட்டமாக மறுத்திருந்தோம். இது தொடர்பான பகிரங்க விவாதத்துக்கு வருமாறு கேட்கிறேன்.

அன்று இரு தரப்பிலும் பிழைகள் இருந்தது மறப்போம் மன்னிப்போம் என்ற அடிப்படையில் தான் நாம் ஒன்றிணைந்தோம். எமக்குள்ளான தொடர்ச்சியாக இளைஞர்கள் உயிரிழந்தார்கள். எமக்குள் இருக்கும் பகைமை தொடரக்கூடாது என நினைத்தோம். தமிழ் தேசிய சக்திகளின் கவனம் முழுவதும் சிங்கள பேரினவாதத்தை நோக்கியதாக இருக்க வேண்டும் என்ற நல்ல புரிந்துணர்வு பொதுமக்களின் எண்ணப்பாட்டுக்கு செயல்வடிவம் கொடுத்தோம்.

த.தே.கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் தேர்தலின் போது விடுதலைப்புலிகள் மிகப்பெரிய ஆதரவை தந்திருந்தார்கள். அதனடிப்படையில் ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால் 2009 க்கு பின்னர் ஆசனங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி வந்துள்ளது.

எனவே மக்களிடம் இருந்த உணர்வும், விடுதலைப்புலிகளின் நேர்மையும் அவர்களின் வேகமான அடிமட்ட கட்டமைப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டதன் அடிப்படையில் தான் மக்கள் மத்தியில் தேர்தல் பற்றிய விளிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதனால் அன்று நாம் வென்றோம் என கூறினார்.

## 8 ம் பக்க தொடர்சி

போதும் பாதிப்புதான். வயதான இவர்களுக்கு வீட்டுத்திட்டம் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ளது. உண்மையில் இப்படியானவர்களை தேடித்தான் உதவிகள் வரவேண்டும். சில சுயாதீன அமைப்பு சார்ந்த இளைஞர்கள் இவர்களின் வீடுதேடிச்சென்று உதவினார்கள்.

தமிழ் மக்களின் உரிமை பற்றி பேசும் தலைவர்கள் வெள்ளத்தில் உதவ வரவில்லை என்று இராணுவத்தளபதி கூறியிருக்கிறார். அதையும் பிரசுரித்து மக்களுக்கு உதவும் படங்களையும் பிரசுரித்தது இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம். மக்களின் வரிப்பணத்தில் ஊதியம்பெறும்



இடர்முகாமைத்துவத்திற்கான ஆளணியை கொண்ட இராணுவத்தினர் இந்த உதவிகளை விளம்பரத்திற்காகவும் அரசியல்வாதிகளிலும் மேலான இழிவரசியலுக்காகவுமே செய்கிறார்கள் என்பது வெளிப்படையானவிடயம். இது இவ்வாறிருக்க தமிழ் மக்களின் குரல் என புலம்பெயர் தேசங்களில் இருந்து "குரல்" கொடுக்கும் ஊடகங்களோ இராணுவ இணையத்தளங்களில் வந்த படங்களையும் ஊக்குவிப்புக்கான மேலதிக படங்களையும் அரைகுறை செய்திகளையும் அவசர அவசரமாக பிரசுரித்து தமக்கே உரிய "திகில்" ஊடகவியலை தொடர்ந்தனர். ஊர் இளைஞர்கள் செய்த செயல்கள் எல்லாம் அவர்களின் ஊடககண்ணுக்குத் தெரியவில்லை என்பது ஒருவிசயம். வியாபார (விபச்சார )ஊடகவியல் இவர்களின் கண்களை மறைத்துவிட்டது என்பது இன்னொருவிசயம். எல்லாவற்றிற்கும் மேலாக இடைத்தங்கல் முகாம்களில் ஏற்பட்ட நெருக்கடி நீர் மற்றும் மலசலகூடவசதியின்மை என்பவற்றின் காரணமாக வெள்ளம் வடிந்த பகுதிகளில் இருந்தவர்கள் வீடுகளுக்கு விரைவாக திரும்பிவருகின்றனர். இருபத்தைந்தாம் திகதி இருபத்தொன்றாக இருந்த இடைத்தங்கல் முகாம்களின் எண்ணிக்கை 27ம் திகதி பத்தாகியது மக்கள் வீடு திரும்பவிரும்பிய போதும் முகாம்களில் இருந்தாலே நிவாரணம் கிடைக்கும் எனக்கூறி பிரதமரும் சுகாதார அமைச்சரும் வரும் வரை மக்களை முகாம்களில் தங்கவைக்க அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் பிரயத்தனமெடுத்தனர் என்பது நம் நாட்டின் தொடரும் சாபக்கேடுகளின் விளைவு என்றால் மிகையாகாது

தமிழ் மக்கள் இராணுவத்தினரை வடக்கு கிழக்கிலிருந்து நீக்கவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். இராணுவ முகாங்கள் அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியேற்றப்பட வேண்டும் என்றும் கோருகின்றனர். இன்னமும் பாடசாலைக்காணிகள் பொதுமக்கள்காணிகள் ஆலயகாணிகள் என பலவற்றில் இராணுவம் குடியிருக்கின்றது. இராணுவத்தளபதியின் பேச்சு வடக்குகிழக்கில் இராணுவத்தை நிரந்தரமாக காலூன்ற வைக்கவும் அதற்காக வெள்ளத்தைப் பயன்படுத்தியதையும் நன்றாக புலப்படுத்துகின்றது.

தவிரவும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்காக இராணுவத்தினர் தண்டிக்கபட வேண்டும் என்றும் இறுதிப்போரில் இலங்கை இராணுவம் இழைத்த இனப்படுகொலைஅநீதிகளுக்கு நீதிவேண்டும் என்றும் மக்கள் கோரிவருகின்றார்கள். இவைகள் எல்லாம் கைவிடப்படும் அல்லது நீர்த்துப்போகும் என்று இராணுவமும் அரசும் நினைக்கின்றது. இராணுவத்தின் இந்த கபடத்தனத்தை உயிர் வேர்வரை வேதனையை அனுபவித்த மக்கள் தெளிவாகவே புரிந்துவைத்துள்ளார்கள்.

இந்த வெள்ளத்தில் தாயக இளைஞர்களின் துடிப்பான பங்களிப்பு பற்றி நாம் மிகவும் பெருமிதப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு உடனடியாகவே சென்று உதவிகளை வழங்கியதுடன் தாயகம் முழுவதிலும் இருந்து அவர்கள் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து பல இளைஞர்கள் சுயாதீனமாக அமைப்புக்களை உருவாக்கி நிவாரணங்களை சேகரித்து மக்களுக்கு உதவியுள்ளனர். மக்களுக்கான அடிப்படை தேவைகளை உணர்ந்து உதவிகளை பகிர்ந்தளித்துள்ளனர். வெள்ளத்தின் பின்னரான தேவைகளையும் ஆய்ந்து வழங்கிவருகின்றனர். இவர்களின் இச் செயற்பாடுகள் தொடர்பில் பல இடங்களில் இருட்டடப்படிப்பு செய்யப்பட்டுள்ளது. விளம்பரங்கள் இல்லாமல் பல உதவிகளை அவர்கள் செய்துள்ளனர். அவைகளை பாராட்டும் அதேவேளை அவர்களின் பணியை பதிவுசெய்வோம். அவர்களின் ஒற்றுமையும் உற்சாகமும் போர்க்கால பட்டறிவின் வெளிப்பாடாகவும் எங்கள் மண்ணின் நம்பிக்கை வெளிச்சமாகவும் தொடர்கிறது என்பதே யதார்த்தமாகும்.

5ம் பக்க தொடர்சி

# இலங்கை அரசின் ஆதரவைப் பெறுவதற்காகவே சொல்லி இருக்கலாம்.

## - சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவரின் மனைவி திருமதி ஜெயசங்கர் முல்லைத்தீவு

விடுதலைக்காக போராடியவர்களை கொச்சைப்படுத்தும் மூலமாக தன்னை பிரபலப்படுத்தும் வகையில் புலிகள் பற்றி இவ்வாறான உண்மைக்கு புறம்பான தகவல்களை சுமந்திரன் சயந்தன் உள்ளிட்டவர்கள் கருத்துக்கூறுவதை விடுதலைப் போராட்டத்திற்காக வலிகளை சுமந்த எங்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. தேசியம் பேசி கூட்டமைப்பில் தேர்தலில் வெற்றி பெற்று புலி எதிர்ப்பு பிரச்சாரம் செய்து ஒத்தோடி அரசியல் செய்யும் முறையே இப்போதுள்ள யதார்த்த அரசியலாகும்.புலிகளால் இனங்காட்டப்பட்டு வாக்களிக்க சொல்லப்பட்ட கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். இந்த நிலைதான் இன்றுவரை தொடர்கின்றது. இந்த அனுதாபத்தில் வாக்கு பெற்று அரசில் பதவிகளையும் சலுகைகளையும் அனுபவித்து விட்டு இவ்வாறான கருத்தை சொல்வது அயோக்கியத்தனமான அரசியலாகும். என்று அவர் வேதனையுடன் கூறினார்.

# சயந்தன் ஏவப்பட்ட அம்பு...

## முல்லைச் செல்வி முன்னாள் போராளி

இன்று சயந்தனே கூட்டமைப்பின் கொள்கை பரப்பு செயலாளராக செயற்படுகின்றார்..எனினும் அவரின் கூற்றானது ஏதோ அவர் மட்டுமே புலிகளின் எதிர்ப்பாளர் என சுட்டிக்காட்டிவிட முடியாது.

ஏனென்றால் இதற்கு முன்பும் கூட்டமைப்பினர் புலிகளைப்பற்றி பலவிதமான விமர்சனங்களை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாகிய தமிழரசு கட்சியின் தலைவர் அவர்களே புலிகள் தொடர்பான விசமத்தனமான செய்திகளை வெளியிடுவதில் பிதாமகனாக இருக்கிறார்.

கூட்டமைப்புக்கும் புலிகளுக்குமான தொடர்பை சீர்குலைக்க இவர் வெளியிட்ட மிக முக்கியமான விடயம் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் புலிகளின் வகிபாகம் இருந்தது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்பதே. இவருக்கே இதுபற்றி தெரியாத போது கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலத்தில் விடலைப் பருவத்தில் சயிக்கிள் ஓடித்திரிஞ்ச சயந்தனுக்கு என்ன தெரிந்துவிடப் போகிறது.தொடர்ந்து சம்பந்தர் அவர்கள் புலிகளை அழித்தபடியால் தான் திருமலைக்கு சுதந்திரமாக போய்வர முடிகிறது என்றும் மகிந்தாவே தேசியத் தலைவர் போலவும் அறிக்கை விட்டிருந்தார். அத்தோடில்லாமல் இவரால் கட்சிக்குள் கொண்டுவரப்பட்ட சுமந்திரன் அவர்களோ இன்னும் ஒருபடி மேலே சென்று இறுதியில் நடந்தது இனவழிப்பல்ல என்றும் புலிகளின் ஜனநாயகப் விரோதப் போக்கே அவர்கள் அழிவுக்கு காரணம் என்பதோடில்லாமல் புலிகள் சிறுவர்களையும் போரில் ஈடுபடுத்தியதை சர்வதேசம் விசாரணை செய்ய வேண்டும் என்றார்.இவ்வாறான அறிக்கைகளை பார்த்து உசுபேறிய சயந்தன்.. தனது பங்குக்கு அறிக்கை விட்டுள்ளார்..இவர்களுக்கு தேர்தல் காலத்தில் மட்டுமே புலிகள் தேவை ...

இவர்கள் இப்படித்தான், இவர்களை தமிழ் மக்கள் ஓரங்கட்டினால் தான் தமிழர்களுக்கு தீர்வு.

# போராட்ட நோக்கத்தை பாராளுமன்றத்தில் உரைக்க

## நேசக்கரங்கள் தொண்டு நிறுத்தின் தலைவர் சுரேந்திரன்

2001.10.20 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. மிதவாத தமிழ் கட்சிகள் மற்றும் முன்னாள் ஆயுத போராட்டத்தில் ஈடுபட்ட கட்சிகள் சிலவற்றை இணைத்து ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்க பட்டதன் நோக்கம் ஆயுத போராட்டம் எதை நோக்கி செல்கறதோ அதை பாராளுமன்றத்திலும் பாராளுமன்ற அங்கத்துவம் வகித்து அந்த பாராளுமன்றத்தில் உரைக்க வேண்டும் என்பதாகும்.

அதில் முக்கியமானவை சுயாட்சிஇ சுயநிர்ணயம் போன்றவற்றை கொள்கையாக கொண்டு என்றும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு துணை நிற்கக்கூடாது என்றும் பாதீடுகளுக்கு ஆதரவு வழங்க கூடாது என்றும் அரசின் நிகழ்ச்சி நிறலுக்குள் சென்று செயற்பட கூடாது என்பதே தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவரின் அறுவுரையாகவும் அதை கட்சி கொள்கையாகவும் ஏற்றுக்கொண்டு 2001ம் ஆண்டு தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆசீர்வாததுடனும் அவர்கள் தமிழ் மக்களுக்கு விடுத்த உத்தரவின் அடிப்படையில் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர்.

அதன் பின் அவ்வாறு செயற்பட்டு வந்தவர்கள் 2010ம் ஆண்டு சுயாட்சி கொள்கையை விட்டு வெளியேறி மட்டுமல்லாமல் தேசிய சிங்கள அரசை அமைக்க தமிழ் மக்களை திசை திருப்பினர் அதில் தோல்வி கண்டனர் அதன்பின் 2015 அதே முயற்சியில் வெற்றி பெற்றது மட்டுமல்லாமல் நிழல் அமைச்சர்களாகவும் செயற்பட்டனர் இவ்வாறு இவர்கள் செயற்பட்டதன் ஊடக கட்சி உருவாக்க பட்ட நோக்கம் கொள்கைகள் அனைத்தும் தவிடு பொடி ஆக்கப்பட்டது. இதில் விடயம் அன்மையில் சயந்தன் அவர்கள் ஆற்றிய உரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கிகாரத்திற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உதவியை நாடியதாக உண்மைக்கு முறனானா கருத்தை கூறி அந்த புனிதர்கள்களை இழிவுபடுத்தி உள்ளார் என்பதே நிதர்சனமான உண்மை.

2 ம் பக்க தொடர்சி



2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழ் அரசியலில் நடைபெற்ற சம்பவங்களின் அடிப்படையில் பார்க்கும்போது கூட்டமைப்பினர் புலிகளுக்கு விசுவாசமாக இருப்பது போல் பாசாங்கு செய்து தமது தேர்தல் நலன்களுக்காக த.தே கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் செயற்பட்டுள்ளார்கள். எனவே அவர்களின் அரசியல் தளத்திலிருந்து பார்க்கும்போது இது ஒருவகை டீலாக இருக்கலாம்

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக மிகப்பெரிய முன்னேற்றம் அடைந்திருந்த நிலையில் புலிகளை அழிப்பதற்கு சர்வதேச நாடுகளுடன் தற்போதுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இணைந்திருந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளை பாராளுமன்றத்திலே பயங்கரவாதிகள் என்று சம்பந்தர் உரையாற்றினார். உண்மையிலேயே விடுதலைப் புலிகளின் வரலாற்றையும் மாவீர்களின் தியாகத்தையும் ஏற்றுக்கொண்ட தமிழரசுக் கட்சியினர் தாம் சந்தர்ப்பவாதிகளாக நடந்து கொண்டதை அண்மைக் காலங்களில் ஒப்புக்கொண்டுள்ளார்கள். சுயநல தேவைக்காகத்தான் புலிகளுடன் இணைந்துள்ளதை அவர்கள் ஏற்றுக்கொண்டதன் மூலம் அவர்களின் உண்மை முகம் அம்பலப்பட்டுள்ளது.

கூட்டமைப்பை உருவாக்கியபோது தமிழர் தரப்பில் இருந்து புலிகளை காட்டிக்கொடுத்த தரப்புகளையும் தமிழ் மக்களின் அரசியல் நலன் சார்ந்து இணைக்க புலிகள் முயற்சி எடுத்தார்கள். அப்போது தமிழர் விடுதலை கூட்டணி உள்ளிட்ட சில கட்சிகள் பலவீனமாக இருந்தன. அந்த காலகட்டத்தில் புலிகளுடன் இணங்கவில்லை என்றால் அவர்கள் முற்று முழுதாக சனநாயக அரசியல் அரங்கில் இருந்து வெளியேற்றப்பட்டிருப்பார்கள். புலிகள் நேரடியாக அரசியலில் ஈடுபடப்போகிறார்கள் என தெரிந்தவுடன் அரசியலில் தொடர்ந்து பயணிப்பதற்காக மேற்குறித்த கட்சிகள் புலிகளின் அரசியல் வழிகாட்டலுக்குள் ஒருங்கிணைந்தார்கள்.

எந்தக் கொள்கைக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த கொள்கையிலிருந்து கூட்டமைப்பு முழுமையாக வெளியேறி தமிழ் மக்களின் நலன்களிற்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது விடுதலைப் புலிகள் பற்றிய கூட்டமைப்பினரின் பார்வை தலைகீழாக மாறியதையிட்டு ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. தேர்தல் காலங்களில் விடுதலைப் புலிகளின் வரலாற்றையும் மாவீரர்களின் தியாகத்தையும் தங்களின் தேர்தல் நலன்களிற்காக பயன்படுத்தும் கூட்டமைப்பினர் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் விடுதலைப் புலிகளிற்கு எதிராக கருத்துக்களை கூறுவதன் மூலம் கூட்டமைப்பின் இரட்டை வேடத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளமுடியும் யாரையோ திருப்திப்படுத்துவதற்கான கருத்தியல் நகர்வாகவே நாம் பார்க்கின்றோம்.

எந்த அடிப்படை நோக்கமும் இல்லாமல் புலிகளுக்கு விசுவாசம் போல் இருந்துகொண்டு தமது அரசியலை தக்கவைத்துள்ளார்கள். அந்த கோணத்தில் பார்க்கும் போது இது தமிழ் தேசிய கூட்டமைப்பின் டீல் தான். கொள்கையில் உறுதியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் புலிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கினார்கள். ஆனால் புலிகளை அழிப்பதற்கு அவர்கள் துணையாக இருந்தார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆரம்பத்தில் எழுத்து மூலமான கொள்கை இருந்தது. அதில் இணைந்த கட்சிகள் அனைத்தும் கையொப்பம் வைத்திருந்தார்கள். கொள்கை அடிப்படையில் இணைந்தார்கள். ஆனால் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமது கொள்கைக்கு விசுவாசமாக இருக்கவில்லை. தாம் தப்புவதற்காகவே அன்று புலிகளுடன் இணைந்தார்கள். ஜனநாயக அரசியலில் ஈடுபடுவதற்கு புலிகள் அனுமதிக்கவில்லை என்றும் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் பின்னர் புலிகளால் அனுமதி வழங்கப்பட்டது என்றும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவிப்பது அப்பட்டமான பொய். எப்போதும் கொள்கைக்கு மாறாக இருந்தவர்களையே புலிகள் எதிர்த்தார்கள் என்பதுதான் உண்மை” என கஜேந்திரகுமார் மேலும் கூறினார்.

# 2019இல் முதலாவது ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டையில் நடைபெறும். தமிழக அரசு அறிவிப்பு



புதுக்கோட்டை மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி ஜனவரி 2ஆம் தேதி நடைபெறும் என தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும். அலங்காநல்லூர் பாலமேடு, அவனியாபுரம் போன்றவை ஜல்லிக்கட்டு போட்டிக்குப் பேர் பெற்றவை. பீட்டா அமைப்பு தொடர்ந்த வழக்கில் ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கப்பட்டதையடுத்து சில ஆண்டுகளாக இப்போட்டிகளை நடத்த முடியாத சூழல் நிலவியது. 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மெரினாவில் ஏற்பட்ட ஜல்லிகட்டு எழுச்சியை அடுத்து ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதற்கு மத்திய உள்துறை அமைச்சகமும் அப்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியும் அனுமதி வழங்கி உத்தரவிட்டனர்.

இதையடுத்து கடந்தாண்டு அனைத்து இடங்களிலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்றன. இந்நிலையில் இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதற்கான பல்வேறு விதிமுறைகள் வகுக்கப்பட்டு அது தொடர்பான அரசாணையை வெளியிட்டுள்ளது தமிழக அரசு. கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக இன்று (டிசம்பர் 27) இந்த அரசாணை வெளியிடப்பட்டது. மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் 2019 ஜனவரி 15ஆம் தேதியும் பாலமேட்டில் ஜனவரி 16ஆம் தேதியும்அலங்காநல்லூரியில் ஜனவரி 17ஆம் தேதியும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறும் என்று இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் தச்சன்குறிச்சியில் ஜனவரி 2ஆம் தேதியன்று ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும் என்றும் அதில் பங்கேற்க 800 காளைகளுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 300 மாடுபிடி வீரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்துவதற்கான அரசாணை விரைவில் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டு போட்டிகளுக்குத் தடை விதிக்கக் கோரி மீண்டும் பீட்டா அமைப்பு தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதனை விரைந்து விசாரிக்க வேண்டும் என்று அந்த அமைப்பு வலியுறுத்தி வரும் நிலையில் தமிழக அரசு ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதற்கான தேதிகளைத் தற்போது அறிவித்துள்ளது.

## அசாமில் எலி கறி அமோக விற்பனை

அசாம் மாநிலம் பக்சா மாவட்டம் குமரிகட்டா என்ற கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் வாரச்சந்தை நடக்கும். இங்கு எலிக்கறி விற்பனை மிகவும் அமோகமாக நடைபெற்று வருகிறது. கோழிக்கறி பன்றி கறியைவிட எலிக்கறி அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. நெல் வயல்களில் பயிர்களை சேதப்படுத்தும் எலிகளை விவசாயிகள் பொறி வைத்து பிடிக்கிறார்கள். இந்த எலிகளை விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் வாங்கி வாரச்சந்தையில் விற்பனை செய்கிறார்கள்.


புதிதாக பிடிக்கப்பட்ட எலிகளுடன் தோல் உரிக்கப்பட்ட எலிக்கறி வேக வைக்கப்பட்ட எலிக்கறி விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ எலிக்கறி ரூ.200க்கு விறக்கப்படுகிறது. பழங்குடி மக்களுக்கு எலிகள் நல்ல வருமானம் தரும் தொழிலாக உள்ளது. தேயிலை தோட்டங்களில் பணியாற்றும் அவர்கள் குளிர் காலத்தில் வேலை இல்லாதபோது எலிகளை பிடித்து விற்று வருமானம் தேடிக் கொள்கிறார்கள்.



இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறும்போது "கடந்த சில ஆண்டுகளாக வயல்வெளிகளில் எலிகள் அதிகமாகி வருகின்றன. அவைகள் பயிர்களை நாசம் செய்வதால் பொறி வைத்து பிடிக்கிறோம். பின்னர் வியாபாரிகளிடம் விற்று விடுகிறோம்" என்றார்.

## "ஆட்டுக்குட்டிக்கு பால் கொடுக்கும் நாய்"

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே உள்ள குமரமலையை சேர்ந்தவர் துரைச்சாமி. இவர் ஆடு ஒன்று வளர்த்து வந்தார். இந்த நிலையில் அந்த ஆடு குட்டி ஒன்றை ஈன்று இறந்து விட்டது. இதனால் அந்த குட்டி பால் இன்றி தவித்து வந்தது. இந்தநிலையில் துரைச்சாமி வீட்டில் வளர்க்கும் நாயே தாயாக மாறி ஆட்டுக்குட்டிக்கு தினமும் பாலூட்டுகிறது. ஆட்டுக்குட்டிக்கு நாய் பால் கொடுக்கும் தகவலை கேள்விப்பட்ட சுற்றுவட்டார பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.



இது குறித்து துரைச்சாமி கூறுகையில் குட்டியை ஈன்ற நான்கே நாட்களில் தாய் ஆட்டுக்குட்டி இறந்து விட்டது. அதன் பிறகு நான் வளர்க்கும் நாயிடம் ஆட்டுக்குட்டி தானாக சென்று பால் குடித்தது. முதலில் நாங்கள் பயந்தோம் ஆட்டுக்குட்டியை கடித்து விடுமோ அல்லது நாயின் பால் ஆட்டுக்குட்டிக்கு ஏற்றுக்கொள்ளுமா? என்றெல்லாம் யோசித்தோம். ஆனால் நாய் அந்த ஆட்டுக்குட்டியை தனது பிள்ளைபோல் அரவணைத்து அன்பு காட்டி பாலூட்டி வருகிறது. இது எங்களுக்கே ஆச்சரியமாகவும்மகிழ்ச்சியாகவும் உள்ளது என்றார்.

## திருக்குறள் எழுதினால் அபராதம் இல்லை மாணவர்களுக்கு பொலிஸ் அதிகாரி நூதன தண்டனை,

பெரம்பலூரில் வாகன சோதனையில் ஈடுபட்டுள்ள இன்ஸ்பெக்டர் தலைக்கவசம் அணியாத மாணவர்களுக்கு 10 திருக்குறளை எழுதக் கூறி வினோத தண்டனை அளித்த வீடியோ சமூகவலைத்தளங்களில் வைரலாக பரவி வருகின்றது.

பெரம்பலூர் போக்குவரத்துக் காவல் பணியில் ஈடுபட்டு வரும் நாவுக்கரசர் என்ற பொலிஸ் அதிகாரி நேற்று பணியிலிருந்த போது சிலர் தலைக்கவசம் அணியாது வாகனத்தை செலுத்தி வந்தனர். அவர்களை நீங்கள் என்ன செய்கிறீர்கள் எனக் கேட்டதற்கு நாங்கள் பாடசாலை கல்லூரி மாணவர்கள் எனத் தெரிவித்தனர். அதற்கு அவர் மாணவர்களாக இருந்தால் அபராதம் செலுத்தத் தேவையில்லை. ஒவ்வொருவரும் 10 திருக்குறளை எழுதி கொடுத்துவிட்டு செல்லுங்கள் என்று கூறியுள்ளார்.

இதற்கு அவர்கள் தங்களுக்கு தெரிந்த திருக்குறளை எழுதிக் கொடுத்துள்ளனர். இதில் சிலர் மற்ற மாணவர்கள் எழுதியதைப் பார்த்து எழுதியும் கொடுத்துள்ளனர். மாணவர்கள் எழுதிய திருக்குறளை வாங்கிப் பார்த்த பொலிஸ் அதிகாரி ஒருவரை ஒருவர் பார்த்து எழுதினீர்களா எனக் கேட்டு சிரித்துவிட்டு வாகனத்தில் செல்லும் போது தலைக்கவசம் அணிந்து செல்லுங்கள். லைசென்ஸ் வாங்கிக் கொண்டு செல்லுங்கள். வாகனத்தில் பெற்றோல் இருக்கின்றதா என்பதைப் பார்த்துச் செல்வது போல் தலைக்கவசம் இருக்கின்றதா சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கின்றதா என்பதையும் பார்த்துச் செல்லுங்கள். நீங்கள் யாருக்கும் பயப்படத் தேவையில்லை என்று கூறி அனுப்பி வைத்தார்.

நாவுக்கரசரின் இந்த வித்தியாசமான அணுகுமுறையை சாலையோரம் செல்லும் மற்றவர்கள் வீடியோ எடுத்தனர். இந்த வீடியோ இப்போது சமூகவலைத் தளங்களில் வைரலாகப் பரவி வருகின்றது

இன்ஸ்பெக்டர் நாவுக்கரசருக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றது

# சிரியாவிலிருந்து இராணுவத்தை வெளியேற்றும் அமெரிக்காவின் திட்டம் சரியா?

அமெரிக்க இராணுவம் சிரியாவிலிருந்து 100 நாட்களில் வெளியேறும் என்று அதிரடியாக அறிவித்திருக்கின்றார் ட்ரம்ப். இது அமெரிக்காவின் நேச நாடுகளை மட்டுமல்லாமல் அமெரிக்க இராணுவத்திற்கே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ட்ரம்பின் இந்த முடிவால் ஒடுக்கப்பட்டிருக்கும் தீவிரவாத அமைப்புகள் மீண்டும் தலைதூக்கும். மத்தியதரைக் கடற்பகுதியில் மீண்டும் உள்நாட்டுப் போர்கள் ஏற்படும் என்ற அச்சம் உலக நாடுகளிடையே ஏற்பட்டுள்ளது.

அல்கொய்தா அமைப்பிலிருந்து 2014இல் பிரிந்து வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் சிரியாவிலும் ஈராக்கிலும் முக்கிய இடங்களை அதிரடியாகக் கைப்பற்றினர். அங்கெல்லாம் பழமைவாத சிரியா சட்டத்தை செயற்படுத்தி காலிஃபேட் சாம்ராஜ்ஜத்தை நிறுவினார்கள். குறுகிய காலத்தில் மத்தியதரைக் கடற்கரையிலிருந்து தென் பக்தாத் வரை தங்களின் ஆளுகையின் கீழ் கொண்டுவந்தனர். ஆட்கடத்தல் இனப்படுகொலை பாலியல் வன்முறைகள் என அவர்களின் கொடூர நடவடிக்கைகள் உலகை அதிர வைத்தன. 2015ஆம் ஆண்டு ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளைத் அமெரிக்கா தொடங்கியது. ரஷ்யா சிரிய அரசிற்கு கைகொடுக்க கடந்த மூன்று ஆண்டுகளில் ஐ.எஸ் பயங்கரவாதிகள் பிடியில் இருந்த 95 சதவீத இடங்கள் மீட்கப்பட்டன. இந்த நிலையில்தான் சிரியாவில் இருந்து வெளியேறும் முடிவை அறிவித்திருக்கின்றார் ட்ரம்ப். ஆனால் இது இராணுவ ஆலோனையை மீறி எடுக்கப்பட்டது என அமெரிக்காவிலேயே கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.



ட்ரம்ப்பின் முடிவிற்கு அதிருப்தி தெரிவித்த அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ஜிம் மாட்டிஸ் கூட்டுப் படைகளின் அமெரிக்கத் தூதுவர் ப்ரெட்மெக்சூர்க் ஆகியோர் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளனர்.

ட்ரம்ப் வரிசையாக சர்ச்சைக்குரிய முடிவுகளை எடுப்பவர்தான். ஆனால் இந்த விடயத்தில் ட்ரம்ப்பை மட்டுமே குறைகூற முடியாது. இதுகுறித்து பேசும் அரசியல் ஆய்வாளர்கள் "பத்து ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்கா எடுத்த கொள்கை முடிவு இது. சுமார் 17 ஆண்டுகள் ஆப்கானிலும் 15 ஆண்டுகள் ஈராக்கிலும் நேரடியாக போரில் ஈடுபட்ட அமெரிக்கா தனது சுமைகளிலிருந்து வெளியேற வழியின்றி தவித்துக் கொண்டிருக்கின்றது. இதனாலேயே முன்னாள் அதிபர் ஒபாமா ஈராக்கிலிருந்து அரைவாசிப் படைகளை மீளப் பெற்றார். இப்போது ட்ரம்பின் முறை. அவ்வளவுதான். தற்போது ஈராக்கிலும் ஆப்கானிலும் 14000 அமெரிக்கப் படையினர் இருக்கின்றனர். ஆனால் சிரியாவில் இரண்டாயிரம் வீரர்கள் மட்டுமே இருக்கின்றனர். தவிர சிரியாவில் அமெரிக்கா நேரடிப் போரில் ஈடுபடவில்லை. குர்திஷ் போராளிகளுக்கு ஆதரவாக சிரியா ஈராக் எல்லையை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கின்றது என்றார்கள்.

ஆனால் அமெரிக்க இராணுவத் தரப்பில்இதற்குஎதிர்ப்புதெரிவிப்பவர்கள் "கூட்டுநடவடிக்கைகளால்ஐ.எஸ்ஒடுக்கப் பட்டுள்ளது தான். ஆனால் இன்னும் அது அழியவில்லை. அமெரிக்கப் படைகள் மீளப் பெறப்பட்டால் அவர்கள் மீண்டும் சிரியாவை முழுமையாக ஆக்கிரமித்து விடுவார்கள்" என்கிறார்கள்.

சிரியாவின் கிழக்கு எல்லையை ஐ.எஸ் பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாக்கும் குர்திஷ் போராளிகளும் அமெரிக்காவின் இந்த அறிவிப்பால் கலக்கம் அடைந்துள்ளனர். அமெரிக்காவின் ஆதரவு இருந்தால் இதுவரை அவர்கள் மீது கைவைக்கத் தயங்கி வந்தது துருக்கி இராணுவம். ஆனால் இனி நிலமை அப்படி இருக்காது. கிட்டத்தட்ட தங்களை வேட்டையாட அமெரிக்கா துருக்கி இராணுவத்திற்கு பச்சைக்கொடி காட்டிவிட்டது என்றே அவர்கள் கருதுகிறார்கள். இதை உறுதி செய்வது போலவே சிரிய எல்லையில் இப்போதே துருக்கி துருப்புகளைக் குவிக்கத் தொடங்கி விட்டது.

இன்னொரு பக்கம் இஸ்ரேலும் இந்த முடிவால் கவலையடைந்துள்ளது. படைகள் மீளப் பெறப்பட்டால் லெபனானில் உள்ள ஹிஸ்டெய்லர் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்கள் வழங்க சிரியாவை ஈரான் பயன்படுத்திக் கொள்ளும். இது இஸ்ரேலுக்குப் பெரும் தலைவலியாக மாறும். இஸ்ரேலும் அரேபியாவும் ஈரானைக் கட்டுப்படுத்த ரஷ்யா பக்கம்சாயக்கூடும்.எல்லாவற்றிற்கும் மேல் சிரியாவில் நிலமை மீண்டும் மோசமாகும். வட சிரியாவில் பயங்கரவாதிகள் கை ஓங்கும். தென் சிரியாவில் குர்திஷ் இனப் போராளிகளுக்கு எதிராக துருக்கி இராணுவ ஊடுருவல் நடக்கும். மத்தியதரைக் கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்துவதற்காக சிரியாவை வளைக்க ரஷ்யா முற்படும். தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஈரான் சிரியாவை பலவீனப்படுத்தும்.

"உலக பொலீஸாக தன்னைப் பாவித்துக் கொண்டு அடுத்த நாட்டுப் பிரச்சினைகளில் தாம் மூக்கை நுழைப்பது எரிச்சலான விடயமே" என்று டிரம்பின் தற்போதைய முடிவை அமெரிக்காவிலேயே ஒருதரப்பினர் ஆதரிக்கின்றனர். அதே சமயம் இன்னொரு தரப்பினரோ சிரியா மட்டுமல்லாமல் ஈராக் ஆப்கான் இங்கெல்லாம் புலிவாலைப் பிடித்த கதையாக அமெரிககா சிக்கிக் கொண்டுள்ளது. அதை அவ்வளவு எளிதில் விடமுடியாது. அப்படி விட்டு விட்டால் அது அமெரிக்காவுக்கே ஆபத்தாக அமையக்கூடும். எனவே ட்ரம்ப் தன் முடிவை மீண்டும் பரிசீலிக்க வேண்டும். என்றாவது ஒருநாள் சிரியாவிலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேற வேண்டும் தான். ஆனால் அதற்கான நேரம் இதுவல்ல என்ற கருத்தை முன்வைக்கின்றனர்.

# வங்கதேச தேர்தல் வன்முறை 17 பேர் பலி;



வங்கதேசத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அந்நாட்டின் பதினோறாவது நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவின்போது நடந்த மோதல்களில் குறைந்தது 17 பேர் உயிரிழந்துள்ளனர். தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என்று குற்றம் சாட்டியுள்ள அந்நாட்டு எதிர்க்கட்சிகள் மறுதேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

வாக்குப்பதிவுக்குப் பிறகு வெளியிடப்பட்டுள்ள முடிவுகளில் தற்போதைய ஆளும் கட்சியே மீண்டும் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்கும் என்று தெரிவிக் கின்றன.16 கோடி மக்கள்தொகை அந்நாட்டில் இஸ்லாமியவாதத் தீவிரவாதம், வறுமை, பருவநிலை மாற்றம், ஊழல் ஆகியன இந்தத் தேர்தலின் முக்கியப் பேசுபொருட்களாக இருந்தன.அதன் அண்டை நாடான மியான்மரின் வன்முறைக்கு உள்ளான பல லட்சம் ரோஹிஞ்சா இன முஸ்லிம்கள் தஞ்சமடைந்ததைத் தொடர்ந்து, வங்கதேசம் சர்வதேசத் தலைப்புச் செய்திகளில் சமீப ஆண்டுகளில் இடம் பிடித்தது. 2014இல் நடந்த தேர்தலை முக்கிய எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி புறக்கணித்த நிலையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்து முக்கியக் கட்சிகளும் போட்டியிடும் தேர்தலாக இத்தேர்தல் அமைந்துள்ளது.

வன்முறை சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ள இந்த தேர்தலில் ஏறக்குறைய 6 லட்சம் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணிகளுக்காக அமர்த்தப்பட்டனர்.கடந்த 10 ஆண்டுகளாக பதவியில் இருக்கும் பிரதமர் ஷேக் ஹசினா தலைமையிலான அரசு சர்வாதிகாரத் தன்மையுடன் நடந்துகொள்வதாகவும், தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. வாக்குப்பதிவில் முறைகேடு நடந்துள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படும் என்று அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளது.

# பிலிப்பைன்ஸ் - வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 50 ஆக உயர்வு

பிலிப்பைன்சில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது என பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள மிண்டானோ தீவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 6.9 அலகாக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.இதற்கிடையே, பிலிப்பைன்ஸ் நிலநடுக்கத்தை தொடர்ந்து அங்கு ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 22 பேர் பலியானதாக முதல் கட்டமாக தகவல் வெளியானது.

இந்நிலையில், பிலிப்பைன்சில் நிலச்சரிவு, வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது என பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சைபர் பேய்கள்

கொள்ளையர்கள் தங்களின் அடையாளம் தெரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக எப்படி முகமூடி அணிந்து கொள்கிறார்களோ அதேபோல சைபர் குற்றவாளிகள் முகமூடிக்குப் பதிலாக சொப்ற்வெயர்களை (கணினி மென்பொருளை) பயன்படுத்தி ஒழிந்து கொள்கிறார்கள். தங்களைக் கண்டுபிடிக்கக் கூடாது என்பதற்காக தென் அமெரிக்கா, ஐரோப்பா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் இருப்பது போல தமது இருப்பிடங்களை அடிக்கடி மாற்றிக் காட்டுகின்றனர். அதற்காக அவர்கள் ஜப்பான், அல்லது சீனாவில் இருக்கிறார்கள் என்பது அர்த்தமல்ல. அவர்கள் எமக்கு அருகில் உள்ள ஒரு அறையில் இருந்துகொண்டு தனிநபர்களின் தகவல்களை அபகரித்துக் கொண்டிருக்கலாம். இப்படிப்பட்ட கணினி குற்றம் குறித்து விவரிப்பதுதான் இந்தச் சம்பவம்.

2016 பெப்ரவரி 13ஆம் திகதி என்னைச் சந்திக்க வேண்டும் என்று ஒரு தம்பதியினர் கூறியதால், அவர்களுக்காக சென்னையிலிருக்கும் மிகப்பெரிய நூலகமான கன்னிமாராவில் ஒரு புத்தகத்தைப் பார்த்தபடி காத்திருந்தேன். சரியாக என்னை அடையாளம் கண்ட அவர்கள் என்னிடம் நேராக வந்தார்கள். தங்களை இம்ரான், மூபின் என அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். சென்னையிலுள்ள ஒரு உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழக ஆசிரியர்கள் என கூறினார்கள்.

வெளியே மரத்தடியில் வந்து அமர்ந்தோம். சில வருடங்களாக சைபர் கிரைம் பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதாக இருவரும் கூறினார்கள். தங்களுக்குக் கிடைத்த சில தகவல்களை பரிமாறிக் கொண்டனர்.

தனது சொந்த கைபேசியில் இணைய இணைப்பை ஏற்படுத்தி கணினிகளை சோதனை செய்து கொண்டிருக்கும் போது தனது விபரங்கள் எல்லாம் புதுவகையான மார்வெல் வைரஸ் மூலம் வெளியே போய்க்கொண்டிருப்பது தெரியவந்ததாக கூறினார். அதை ஆராய்ந்த போது இரண்டு மாதங்களுக்கு முன்னர் இணையதள இணைப்பின் மூலம் தான் பீஸா வாங்கிய கடையைக் காட்டியதாகக் கூறினார்.

அன்றிலிருந்து இன்று வரை தனது கைபேசியிலிருக்கும் விபரங்கள் அனைத்தும் அந்தக் கடையின் தகவல்தளத்திற்குப் போவது தெரியவந்தது. அத்தோடு அன்றிலிருந்து கைபேசியில் இருக்கும் விபர ஐகொன்கள் தானாகவே திறப்பதுடன் வங்கிக் கணக்கிலிருந்து ஒரு ரூபா முதல் 10ரூபா வரை குறைந்து கொண்டே இருப்பதாக இம்ரான் கூறினார்

ஸ்னோடன், அசாஞ்சே போன்ற தகவல் திருட்டுக்கள் பற்றிய விபரங்களை படித்திருக்கிறேன் என்றும் இந்த மாதிரியான திருட்டுகள் இப்போது நிறையவே நடந்து கொண்டிருப்பதாக கேள்விப் பட்டிருப்பதாகவும், ஆனால் இப்போது தான் அதை நேரில் பார்ப்பதாகவும் கூறினார். இதுபோன்ற கண்ணுக்குத் தெரியாத திருடர்களை பேய்கள் என்று கூறுவர். இது தொழில்நுட்ப பிரச்சினையாகும். இதை சாதாரண விசாரணை மூலம் ஆரம்பிக்க முடியாது. சட்டரீதியான காவல்துறை மூலம் நகர்த்தலாம். அல்லது தொழில்நுட்ப நிறுவன நிபுணர்கள் உதவியை நாட வேண்டும்.

இம்ரானுக்கு காவல்துறையில் புகார் கொடுப்பது பிரச்சினையில்லை. ஆனால் அதற்குரிய ஆதாரங்கள் தேவைப்பட்டது. இதனால் இதை பிடிக்க சில மாணவர்களையும் இணைத்தேன். சில நாட்களின் பின்னர் அந்த பீஸா கடையின் பல கிளைகளுக்கும் தனித்தனியாக போக ஆரம்பித்தோம். சிலரை கிரடிட் காட் மூலமும், சிலரை காசாகவும் பில் கொடுக்க வைத்தோம்.

இதில் கிரடிட் காட் மூலம் பணம் செலுத்தியவர்கள் விபரம் அந்த பி.ஓ.எஸ் இயந்திரம் மூலம் சேகரிக்கப்பட்டன. பணமாக செலுத்தியவர்கள் விபரம் கூப்பன், சினிமா டிக்கெட் என்ற பெயரில் அவர்களின் விபரங்களையும், கைபேசி இலக்கங்களையும் சேகரித்தார்கள். ஆக்கிரமித்திருப்பது தெரியவந்தது.

இப்படியாக சில மாதங்களாகக் கிடைத்த தகவல்களை ஆவணப்படுத்தி பார்த்த போது, அந்தப் பீஸா கடையிலிருந்து செல்லும் அனைத்துத் தகவல்களும் ஹங்கேரி நாட்டின் புடாபெஸ்ட் என்ற நகருக்குப் போய்ச் சேருவது தெரிந்தது. இதுபற்றி அந்தக் கடையில் வேலை செய்யும் சில ஊழியர்களிடம் விசாரித்தோம். இப்படி ஒரு விடயம் நடப்பதே நாங்கள் சொல்லித் தான் தெரியும் என சொன்னார்கள்.



இப்படியாக ஒரு வாரம் சேகரித்த பின்னர் எங்கள் கைபேசிக்கு வழக்கத்தை விட அதிக தகவல்கள் வரத் தொடங்கின. பீஸா ஓபர்கள், துணி ஓபர்கள் என தேவையில்லாத தகவல்கள் வரத் தொடங்கின.

இது பற்றி ஆராய்ந்ததில் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் மொத்தத் தகவல்களையும் பணம் கொடுத்துப் பெறுவதற்கு சில விளம்பர நிறுவனங்கள் போட்டி போடுவது தெரிந்தது. இவ்வாறு கடந்த 5 மாதங்களில் அந்தக் கடைக்கு வந்த 35,000 வாடிக்கையாளர்களின் தகவல்கள் ஏதோ நிறுவனத்திற்கோ அல்லது யாரோ ஒரு கிரிமினலுக்கோ இணையதள முகவர் மூலமோ அல்லது வேறு வழியிலோ ஏலம் விட்டதைக் கண்டுபிடித்தோம்.

தினமும் சிறிய தொகை வங்கி மூலம் எடுக்கப்படுவதை பலரும் பெரிய விடயமாகக் கருதவில்லை. வங்கியில் ஏதோ கட்டணம் எடுக்கிறார்கள் என்று நினைத்தார்களே தவிர இது அந்தப் பேய்களின் வேலை என எவரும் நினைக்கவில்லை. இந்தத் தகவல்களை வாங்கும் அந்த நிறுவனம் அல்லது நபர் பல்வேறு சிறு சிறு மார்வெல் வைரஸ்களை அவர்களின் கணினிகளுக்கு அனுப்பி அவர்களின் தகவல்களை மெல்ல மெல்ல திருடுகின்றனர்.

உதாரணமாக ஒரு பெண் ஒரு ரீசேட் வாங்குகின்றார் என்றால் அவரின் விபரங்கள் உரிய, வேறு ரீசேட் கம்பனிகளுக்கு அனுப்பப்படும். அடுத்த சில நிமிடங்களில் அந்தப் பெண்ணின் கைபேசிக்கு பல ரீசேட் கம்பனிகளின் விபரங்கள், விளம்பரங்கள், அனுப்பப்படும். அதில் ஓபர் விபரங்களும் சேர்த்துக் கொள்ளப்படும். இது ஒரு நபரை மட்டுமல்ல பலரை ஏமாற்றும் வித்தை என அறிந்து கொண்டேன். இதற்குப் பின்னால் பல மூளைகள் செயற்படுவதையும் அறிந்து கொண்டேன். இது கைபேசியை மட்டுமல்ல, பலரும் பாவிக்கும் பேஸ்புக், இன்ஸ்ர கிராம் போன்ற பல்வேறு வலைத்தளங்களையும்

கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் விபரங்களை வாங்கும்படி சில நிறுவனங்கள் கோரியிருந்தன. இது ஒரு விளம்பர யுக்தி என தாங்கள் எண்ணியிருந்ததாகவும், இதற்குப் பின்னால் இப்படியொரு மோசடி இருக்குமென தெரியாது என்றும் சொன்னார்கள். இந்தக் கடையில் வேலை செய்த 22 பேரை விசாரித்ததில் அதில் ஒருவன் மட்டும் வித்தியாசமாகத் தெரிந்தான். அவன்தான் அந்த இணையதள பேயிடம் என்னைக் கூட்டிச் செல்லப் போகின்றான் என என் உள்ளுணர்வு கூறியது. அவன் இந்தப் பீஸா கடையின் சில கிளைகளில் வேலை செய்யும் ஒரு பொறியியலாளர்.

அவன் மீது எனக்கு சந்தேகம் வரக் காரணம், மற்றவர்களை கேள்விகள் கேட்கும் போது அவர்கள் அதை பெரிதாக எடுக்கவில்லை. இவன் மட்டும் நாங்கள் வந்ததன் நோக்கத்தை அறிந்து கொண்டான். இதனால் இவனை கண்காணிக்கும்படி இம்ரானிடமும் அவரின் மாணவர்களிடமும் கூறினேன்.

இரண்டு நாட்களின் பின்னர் இம்ரானின் மாணவர் ஒருவரிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. அதில் அவர் அந்த நபர் நேற்று இரவு யாருடனோ தொலைபேசியில் அதிக நேரம் உரையாடியதாகவும், அவர் உரையாடிய இலக்கம் ஹங்கேரி நாட்டிற்குரியது என்றும் தெரிய வந்தது. அவரின் ஊடாகவே தகவல்கள் கடத்தப்படுகின்றது என்பதை அறிந்து கொண்டேன். அதன் பின்னர் அவரின் வங்கிக் கணக்கை ஆராய்ந்த போது அவருக்கு ஐரோப்பிய நாட்டிலிருந்து பணப்பரிமாற்றம் செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது.

அத்தனை ஆதாரங்களையும் இம்ரானிடம் கொடுத்த பின்னர், இது குறித்து அவர் சைபர் கிரைம் பொலிசாரிடம் புகார் செய்தார். அவர்களும் சில நிபுணர்களை வைத்து அந்த பேய் செய்த சில தொழில்நுட்ப வேலைகளை சில நாட்களில் கண்டுபிடித்தனர். அவர்கள் எப்படிக் கண்டு பிடித்தார்கள் என்பது தான் சுவாரஸ்யம்.